விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 013 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 17 புதன்கிழமை (01.01.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

புலமைப் பரிசில் பரீட்சை தொடர்பில்

## நீதிமன்றத் தீர்ப்பை ஆராய கால அவகாசம் தேவை

### பரீட்சை ஆணையாளர் நாயகம்

(கொழும்பு)

தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பில் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பிற்கு அமைய மிகவும் பொருத்தமான தெரிவை ஆராய சிறிது கால அவகாசம் தேவை என பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார். 15

## பொதுமக்களுக்குப் பொறுப்பு கூறலை உறுதி செய்வதற்கு

### அமைச்சுக்களில் விசாரணைப் பிரிவுகள்

(கொழும்பு)

அரச நிறுவனங்கள் பொதுமக்களுக்குப் பொறுப்புக்கூறுதலை உறுதி செய்வதற்காக அமைச்சுக்களில் விசாரணைப் பிரிவுகளை நிறுவுவதற்கான யோசனைக்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

தற்போது அரச சேவை தொடர்பில் நாளாந்தம் அதிகளவு முறைப்பாடுகள் பெயர் குறிப்பிட்டும், பெயர் குறிப்பிடப் படாமலும் ஜனாதிபதி அலுவலகம், பிரதமர் அலுவலகம் 15




# மொட்டு மீண்டும் மலரும் எவரும் சிதைக்க முடியாது

## மகிந்த இறுமாப்பு

(கொழும்பு)

மொட்டுக்கட்சி படுதோல்வியடைந்து விட்டதாகவும் அதற்கு இனி எதிர்காலம் இல்லை என்று எவரும் கனவு காணக்கூடாது. மொட்டு மீண்டும் மலரும். எவராலும் அதைச் சிதைக்க முடியாது என பொதுஜன பெரமுன கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். (15ஆம் பக்கம் பார்க்க)



ஏப்ரல் மாதத்துக்குள்

## உயர்தர பெறுபேறுகளை வெளியிட எதிர்பார்ப்பு

(கொழும்பு)

எதிர்வரும் ஏப்ரல் மாதத்திற்குள் உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிட எதிர்பார்த்துள்ளதாகப் 15

## ஊழல் எதிர்ப்புச் சட்டத்தை திருத்துவதற்கு அரசு தீர்மானம்

(கொழும்பு)

ஊழல் எதிர்ப்புச் சட்டத்தை திருத்தம் செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் ஏற்பாடுகளை ஆய்வுசெய்து கட்டாயமாகத் திருத்தம் செய்ய வேண்டிய பிரிவுகள் மற்றும் உள்ளடக்கப்பட வேண்டிய புதிய பிரிவுகள் தொடர்பான விதந்துரைகள் அடங்கிய விபரமான அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்காக தனியான குழுவொன்றை நியமிக்கவும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சரத்துக்களை புலனாய்வு செய்வதற்காக ஆணைக்குழுவின் ஒரு ஆணையாள 15

## ஒதுக்கீட்டுச் சட்டமூலம் அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

2025ஆம் நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தைத் தயாரிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்று உரையாற்றிய அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன் படி சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள 2025 நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றுள் 15

## 5 ரூபாயினால் மண்ணெண்ணெய் விலை குறைப்பு

(கொழும்பு)

நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் மண்ணெண்ணெய் விலையை மாத்திரம் இலங்கை கனியவள கூட்டுத்தாபனம் குறைத்துள்ளது.

அதற்கமைய, மண்ணெண்ணெய் விலை 15

## பொலிஸாரின் யூரியூப் சனல் மீது சைபர் தாக்குதல்

(கொழும்பு)

இலங்கைப் பொலிஸின் உத்தியோகபூர்வ யூரியூப் சனல் சைபர் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது.

தற்போது அதன் 15

## 2025 பட்ஜெட் பெப்ரவரி 18 முதல் மார்ச் 21 வரை விவாதம்

(கொழும்பு)

2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட விவாதத்தை 2025 பெப்ரவரி 18ஆம் திகதி முதல் மார்ச் 21ஆம் திகதி வரை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் வைத்திய கலாநிதி ஜகத் விக்ரமரத்ன தலைமையில் பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற பாராளுமன்ற அலு 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நம்பினால் நம்புங்கள்

அதிசயம் ஆனால் உண்மை உங்கள் எதிர்கால வாழ்க்கை துல்லியமாக (காண்டம்) கணித்துத் தரப்படும். ஜனன ஜாதகம் எழுதித் தரப்படும்.

**காயத்திரி திருமண சேவை**

கன்னாதிட்டி சிவன் கோயில் முன்பாக
ரூபி விலாஸ்

**075 353 1367, 077 844 9861**

(2877)

## நீதவான் இடமாற்றம்

(கொழும்பு)

கொழும்பு பிரதான நீதவான் திலின கமகே நீதிச்சேவை ஆணைக் குழுவினால் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இதன்படி திலின கமகே மொரட்டுவை மாவட்ட நீதிமன்றத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (ம-7)

## வைத்தியம்

வலிப்பு நோய் | கை விறைப்பு
கழுத்து வலி | கால் பாத விறைப்பு |
முள்ளந்தண்டு வலி | முழங்கால், குதி வலி
Sciatica | Rheumatic Arthritis | நாட்பட்ட சளி
தலைக்கு இரத்தம் போகாமை, வாதம்
நம்பிக்கையான மூலிகை, Acu சிகிச்சைகள்
நல்லூர், யாழ்ப்பாணம்.

Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)

தொடர்புகளுக்கு : **0777 301 669**

(2887) நிபந்தனைகளுக்கு உட்பட்டது

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




கோம்பாவில் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த

### செல்வி. மரியாம்பிள்ளை சர்மிலி

புதுக்குடியிருப்பு உதவிப் பிரதேச செயலாளராகக் கடமையாற்றி 01.01.2025 இன்று முதல் மாந்தை கிழக்குப் பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இவரை அப்பா, அம்மா, உடன்பிறப்புக்கள், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார், மச்சாள்மார், மச்சான்மார், வாழ்த்துவதுடன் மேலும் பல உயர் பதவிகள் பெற்று நீண்டகாலம் ஆரோக்கியத்துடன் வாழ வாழ்த்துகின்றோம்.

சபாபதிப்பிள்ளை வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

சி.நடராசா(மாமா)
ஓய்வு நிலை அதிபர்

(2869)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு





கடந்த 09.11.2024 சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்
அமரர்
**திரு. சின்னவி கந்தையா**

கடந்த 05.12.2024 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி
அமரர்
**திருமதி கந்தையா நல்லம்மா**

ஆகிய இருவரின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை 02.01.2025 வியாழக்கிழமை காலை 07.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் 04.01.2025 சனிக்கிழமை பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து, அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஊரெழு மேற்கு,
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்

(696)

## NEW SCIENCE HALL

**KANNATHIDDY ROAD JAFFNA**

### 2025 A/L DAY CLASS

**கணித, விஞ்ஞானப் பிரிவுகள்**

(2024 A/L பரீட்சைக்கு தோற்றியவர்கட்குரியது)

| | |
|---|---|
| **COM.MATHS** | |
| P. செந்தில்நாதன் | 7.00 AM |
| S. சிவகரன் | 5.00 - 7.00 PM |
| **BIOLOGY** | |
| V.S. குணசீலன் | 8.00 - 9.30 AM |
| **CHEMISTRY** | |
| V.K.நந்தா<br>P.லோகா | 9.30 - 11.30 AM |
| **PHYSICS** | |
| G.பிரபா<br>R.ராகுலன் | 12.00 - 2.00 PM |

**ஆரம்பம் : 06.01.2025** திங்கட்கிழமை
நிகழ்நிலை (Zoom) வகுப்புக்களும் நடைபெறும்.

https:// facebook.com
NEW SCIENCE HALL JAFFNA

(C-1920)

தொடர்புகட்கு : **077 791 7611, 076 566 3006, 076 569 3006**

## 4ம் ஆண்டு நினைவஞ்சலி



### பிரான்சிஸ் வின்சென்டீபோல்

"வித்தியா காருண்யன்"

பிறப்பு
03.04.1938

இறப்பு
01.01.2021

ஆலம் விழுதுகள் போல ஆயிரம் உறவு கொண்டு
குடும்ப உறவுகள் வீழ்ந்திடாதிருக்க வேரென இருந்தவரே
காலமெல்லாம் உம் பிள்ளைகளை அரவணைத்து
கலங்கரை விளக்காய் வழிகாட்டினீரே!

நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட பார்வையும்
அமிர்த சுரபியாய் யாவர்க்கும் வழங்கும் வல்லமையும்
சுற்றத்தைப் போற்றிக் காக்கும் உயர் பண்பும்
நிறைந்த உத்தம குணமும் படைத்தவரே!

சிரிப்பு சிந்திய உங்கள் வதனம்
ஆறுதலான உங்கள் வார்த்தைகள்
நேர்மையான உள்ளம்
எவ் வேளையிலும் தளராத மனம்
இத்தனையும் கொண்டு சிறப்புடனே வாழ்ந்தீரே!

நீர் எம்மை விட்டு பிரிந்து நான்கு ஆண்டுகள் ஆனாலும்
உம் பிள்ளைகள் நாம் உமது நினைவுகளுடன்
இன்றும் என்றும் வாழ்ந்து கொண்டிருப்போம்.
ஆண்டவரின் தோழமையில் நீர் இன்புற்றிருக்க
உமக்காய் இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

றோஸ் கொட்,
[illegible]
...த்துறை.

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்


(C-1919)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தின் பெறுமதி உணர்ந்து கருத்தோடு செயற்படுவோம்

## புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் கலாநிதி ஆறு.திருமுருகன்

(யாழ்ப்பாணம்)



**மனிதப் பிறப்பின் மகத்து வத்தினை நாங்கள் அனைவரும் உணர்ந்து மாசற்ற மனிதராக வாழ முயற்சி செய்து, நாம் இதுவரை நம் சமூகத்திற்காக என்ன நற்கருமங்களை ஆற்றினோம் என எண்ணி பிறக்க இருக்கும் புதுவருடத்தில் நல்ல காரியங்களை செய்யத் திட்டமிடுவோம் என தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவர், கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், பிறக்கவிருக்கும் புதிய ஆண்டில் நல்ல பல புதிய எண்ணங்களோடு எமது கடமைகளைத் திட்டமிட்டு எங்கள் மண்ணில் சகல வளங்களும் செழிப்புற ஒன்றுபட்டு உழைப்போம்.

காலத்தின் பெறுமதி உணர்ந்து கருத்தோடு செயற்பட்டு தவப்பொழுதாக ஒவ்வொரு நிமிடத்தினையும் கருதி அவப் பொழுதாக நேரத்தை செலவு செய்வதைத் தவிர்ப்போம்.

நவீன விஞ்ஞானம் தந்த கருவிகளையும் அறிவுகளையும் நன்மைக்காக மட்டும் பயன்படுத்தி பிறரை வாழ்த்தும் நற்பண்பை வளர்ப்போம்.

உறவினர்களின் அன்பையும் ஆதரவையும் பேணி நல்ல நட்பினை நேசிப்போம். வீண்செலவுகளைக் கட்டுப்படுத்தி உடல், உள நலத்தோடு வாழ்வதற்கு முயற்சி செய்து எம் முன்னோர் உருவாக்கிய பலன் தரு நிலையங்களை அடுத்த தலைமுறை பேண வழி செய்து அன்பைப் பெருக்கி அனைவரும் மகிழ்வாய் வாழ புத்தாண்டில் பிரார்த்தனை செய்வோம் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-8)

## விளம்பரங்களில் சிறுவர்களை பயன்படுத்தத் தடை

(கொழும்பு)

2025 ஜனவரி முதலாம் திகதி முதல் உணவுப் பொருட்களின் விளம்பரங்களில் 12 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் பயன்படுத்தப்படுவதை தடை செய்யும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சர் கலாநிதி நலிந்த ஜயதிஸ்ஸவினால் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. (நி-8)

## சிறுவர்கள் மத்தியில் பரவும் வைரஸ் காய்ச்சல்கள்

### மருத்துவர் விடுத்துள்ள எச்சரிக்கை

(கொழும்பு)

சமகாலத்தில் சிறுவர்கள் மத்தியில் பல வகை வைரஸ் காய்ச்சல்கள் பரவி வருவதாக சிறுவர் நல மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

பாடசாலை விடுமுறை என்பதாலும் சுற்றுலா மற்றும் விளையாட்டு நடவடிக்கைகளில் அதிகளவில் ஈடுபடுவதால் பிள்ளைகள் வைரஸ் தொற்றுகளுக்கு ஆளாகின்றனர் என வைத்தியர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இன்புளுவன்ஸா ஏ மற்றும் பி நோய், வயிற்றுப் போக்கு, கடுமையான குளிர், உடலில் சிவப்புப் புள்ளிகள், காய்ச்சல் மற்றும் நீண்ட கால இருமல் ஆகியவை வைரஸால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் அறிகுறிகளாக தெரிவிக்கப்படுகின்றன.

ஆனால் இந்த நோய் ஒரு வைரஸ் என்பதால், நுண்ணுயிர் எதிர்ப்பிகளை கொடுக்க வேண்டிய அவசியமில்லை.

இந்த நோயைக் குணப்படுத்துவதற்கு குறிப்பிட்ட அளவுகளில் மட்டுமே பராசிட்டமோல் கொடுப்பதும் ஓய்வு எடுப்பதும் மிகவும் அவசியமானது என்றும் விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா சுட்டிக்காட்டியுள்ளார். சில சிறுவர்களுக்கு நோய் குணமான பிறகு தலைவலி அல்லது இருமல் வரக்கூடும் என்பதால், பெற்றோர்கள் தேவையான மருத்துவ ஆலோசனையைப் பெறுமாறு மருத்துவர் கேட்டுக் கொண்டுள்ளார். (நி-8)


# 17ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திரு.

தியாகராசா மகேஸ்வரன்

(முன்னாள் இந்து கலாசார அமைச்சரும்

யாழ். கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும்)

அப்பா.....

உங்கள் அழியாத நினைவுகள்

நெஞ்சோடு இன்னும்

அலைமோதுகின்றது.....

அறியாத பருவத்தில்

அழைத்துச் சென்றானே உங்களை,

இன்று அறிவோடு உயர்ந்து விட்டு

அம்மாவோடு எதிர்பார்த்து காத்திருக்கிறோம்.

உயரத்தில் இருந்து எங்கள்

உயர்வுகளுக்கு வழிகாட்டுங்கள் அப்பா......

(008)

தோற்றம் 10.01.1966

மறைவு 01.01.2008

பிள்ளைகள்
பவதாரணி(மகள்),
பிரணவன்(மகன்), பவித்திரா (மகள்)

தகவல்:- திருமதி.விஜயகலா மகேஸ்வரன்
இல.32,36 ஆவது ஒழுங்கை, கொழும்பு - 06.
தொலைபேசி : 2360679

இல.276, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 1877


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.எம்.எப் நிபந்தனைகளை

# மக்களுக்கு நன்மைதரும் வகையில் மாற்ற முடியும்

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியம், மாற்றங்களை ஏற்படுத்த முடியாத நிபந்தனைகளை முன்வைக்கவில்லை. எமது வருமானம் மற்றும் செலவு முகாமைத்துவத்தில் அவர்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டால் மக்கள் நலன் கருதி சில விடயங்களில் மாற்றங்களை ஏற்படுத்த அவர்கள் உடன்படுவர் என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. தற்போதுள்ள பொறிமுறைக்குட்பட்டுத் தான் நிவாரணத் திட்டங்களும் நடைமுறைப் படுத்தப்படுகின்றன. அதேவேளை நாணய நிதியம், மாற்றங்களை ஏற்படுத்த முடியாத நிபந்தனைகளை முன்வைக்கவுமில்லை.

இணக்கப்பாட்டிலுள்ள நிபந்தனைகள் எந்தளவுக்கு மக்களுக்கு நன்மை தரக் கூடியவையாக உள்ளன என்பது தொடர்பிலேயே நாம் அவதானம் செலுத்தியிருக்கின்றோம்.

அரசாங்கம் என்ற ரீதியில் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி அதற்கமையவே எமது செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்.

நாட்டின் அபிலாஷைகளுக்காக மக்களின் தேவைகளை முன்னிலைப்படுத்தி சர்வதேச நாணய நிதியத்துடனான இருதரப்புப் பேச்சுவார்த்தைகள் தற்போதும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதில் எவ்வித சிக்கலும் இல்லை.

நாணய நிதியத்திடமிருந்து கடன் தொகைகள் உரிய காலத்தில் கிடைக்கின்றன. நாம் மக்கள் சார்பில் அவர்களிடம் எமது நிலைப்பாடுகளை முன்வைத்துக் கொண்டிருக்கின்றோம் என்றார். (ம-7)

**நாகபூஷணி திருமண சேவை**

**அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்**

வைத்தியர், பொறியியலாளர், அரச, தனியார் துறை, உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் பல்லாயிரக் கணக்கில் எம்மிடம் உள்ளனர்.

மிகப் பொருத்தமான ஜாதகங்கள் உடன் தரப்பட்டு, துரிதமாகத் திருமணம் நிறைவேற்றித் தரப்படும்.

**198, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.**

(வன்னி இன் ஹோட்டலுக்கு அருகில்)

**077 138 7596, 071 999 9306**

(2288)

# விடுதலைப் புலிகளால் மகிந்தவுக்கு உயிர் அச்சுறுத்தல் ஏதுமில்லை

## அடித்துக்கூறுகிறார் சரத் பொன்சேகா

(கொழும்பு)

முப்பது தசாப்த கால போரினை நிறைவுறுத்திய ஜனாதிபதி என்ற வகையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு விடுதலைப் புலிகளினால் உயிர் ஆபத்துள்ளது. ஆகவே அவருக்கான இராணுவப் பாதுகாப்பை நீக்கியமை தவறு எனப் பொது ஜனப் பெரமுனவினர் தெரிவித்து வரும் நிலையில் மகிந்தவுக்குப் புலிகளால் எதுவித உயிர் ஆபத்தும் வராது என பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

நேற்று ஊடகங்களிடம் இது குறித்துக் கருத்துரைத்த அவர்,

மகிந்த ராஜபக்ஷவின் மீது புலிகளுக்கு எந்தவொரு வைராக்கியமும் இல்லை. போர் இடம்பெற்ற தருணத்திலும் அவருக்கு எவ்வித உயிர் அச்சுறுத்தலும் இருக்கவில்லை. மகிந்த ராஜபக்ஷ மீது குண்டுத் தாக்குதலை நடத்தவோ அல்லது வேறு விதமான தாக்குதலை நடத்தவோ எந்தவொரு தீவிரவாதியும் முற்பட்டிருக்கவில்லை.


மகிந்த ராஜபக்ஷ தனியாகவா யுத்தம் செய்தார்? நாம் யுத்தம் செய்யவில்லையா? யுத்தத்துக்குத் தலைமை தாங்கிய இராணுவத் தளபதியான எனது முழுமையான பாதுகாப்பை 2010ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் பெறுபேறு வெளியாகுவதற்கு முன்னரே நீக்கினர். அப்போது எனக்கு தீவிரவாத அச்சுறுத்தல் இருக்கவில்லையா?

வெலிக்கடைச் சிறையில் என்னை அடைத்த தருணத்தில் புலிகள் அமைப்பைச் சேர்ந்த தீவிரவாதியொருவர் சிறையில் இருந்தார். அத்தருணத்தில் எனக்கு எவ்வித விசேட பாதுகாப்பும் அளிக்கப்படவில்லை. பின்னர் நீதிமன்றத்துக்கு அழைத்து வந்த தருணத்தில் இராணுவத் தலைமையகத்தில் என்மீது தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்தவந்திருந்த முரிஸ் என்ற தீவிரவாதியும் நானும் ஒரே பாங்கில்தான் அமர்ந்திருந்தோம். அப்போது எனக்குத் தீவிரவாத அச்சுறுத்தல் இருக்கவில்லையா?

அதனால் மகிந்த ராஜபக்ஷவிற்கு எப்போதும் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தமாட்டார்கள். மகிந்த ராஜபக்ஷ, பிரபாகரனுடன் சமாதானப் பேச்சுக்களை நடத்தி யுத்தத்தை நிறைவுக்குக் கொண்டுவருவதாகவே ஆட்சிக்கு வந்தார். போர் முடிவதற்கு 3 மாதங்கள் இருந்த தருணத்தில் போர் நிறுத்தத்தை அறிவித்தார். பிரபாகரன் உள்ளிட்ட தலைவர்கள் தப்பித்துச் செல்லவே அவர் அந்த நடவடிக்கையை எடுத்திருந்தார். போர் நிறுத்த அறிவிப்புக் காரணமாக மூன்று மாதங்கள் போர் பின்நோக்கிச் சென்றதுடன், இராணுவத்தினரும் 5 கிலோமீற்றர் நோக்கிச் செல்லும் நிலை ஏற்பட்டது. மகிந்த ராஜபக்ஷ புலிகளுடன்நெருங்கிய உறவை அவர் பேணியிருந்தார். அதனால் புலிகளால் அவருக்கு உயிர் ஆபத்து இல்லை என்று உறுதிபடத் தெரிவித்தார். (ம-7)



# மரண அறிவித்தல்



பிறப்பு 09.11.1951

இறப்பு 29.12.2024

"சிவனருட்சீலர்" "ஆன்மீகப்பேரொளி"

## செல்லையா ஜெயபாலசிங்கம்

சரவணையைப் பிறப்பிடமாகவும் மணல்தறை வீதி, கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட Evershine கல்விக் குழுமத்தின் ஸ்தாபகரும், நிர்வாகத் தலைவருமாகிய "சிவனருட்சீலர்" "ஆன்மீகப்பேரொளி" செல்லையா ஜெயபாலசிங்கம் அவர்கள் கடந்த 29.12.2024 ஞாயிற்றுக்கிழமை சீரடி இந்தியாவில் சிவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - பாக்கியலக்சுமி தம்பதியினரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற நாகமணி - சிந்தாமணி தம்பதியினரின் அன்பு மருமகனும் சறோஜினியின்(அதிபர் - Evershine Kids World) அன்புக் கணவரும் சிந்துஜா(விரிவுரையாளர் - தேசிய கல்வியியற் கல்லூரி), மதுரிகா(பணிப்பாளர் - Evershine Kids World), திறோஜன்(புவித்தொழில்நுட்பவியல் பொறியியலாளர் - கனடா), ஜனுசன் (கட்டமைப்புப் பொறியியலாளர், Structural Engineers, Design Consultants) ஆகியோரின் அன்புத் தந்தையும் கௌசிகன்(ஆசிரியர்), சுஜீவன்(சிரேஷ்ட மின்பொறியியலாளர் - இலங்கை விமானப்படை), சுதர்ஷிகா(மென்பொறியியலாளர் - கனடா), சிவநங்கை(அபிவிருத்தி உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்பு மாமனாரும் அஷ்வினா, அக்ஷரன், அடெலியா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற பரஞ்சோதி மற்றும் செல்வராணி ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் சண்முகாநந்தம்(கனடா), வசந்தகுமாரி, வசந்தகுமார்(பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற கணநாதன் மற்றும் தயாநிதி(கனடா), உதயகுமார், கிருபா(பிரான்ஸ்) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 02.01.2025 வியாழக்கிழமை காலை 11.30 மணியளவில் இல.61, மணல்தறை வீதி, கந்தர்மடத்தில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 01.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இல-61, மணல்தறை வீதி,
கந்தர்மடம்.

தகவல்: குடும்பத்தினர்
021 222 3726

(2886)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அன்றும், இன்றும் என்றும் அனைத்து இலங்கையர்களுக்கும்
தேசிய பாதுகாப்பின் சக்தியை வழங்கும் பலம்பொருந்திய கரம்
**ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் இன் புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்!**

SLIC
ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ்
நந்தையும் தாயும் போன்று

www.srilankainsurance.com

Company Registration Number - PB 286 *நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கம்மா அப்பாக்குட்டியின் நூற்றாண்டு விழாவும் மலர் வெளியீடும்



(யாழ்ப்பாணம்)

அன்னை சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி (ஜே.பி) அவர்களின் நூற்றாண்டு விழா நிகழ்வுகள் எதிர்வரும் 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு துர்க்கா தேவி தேவஸ்தான அன்ன பூரணி மண்டபத்தில் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களின் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் காலை 8.30 மணிக்கு மல்லாகம் பழம்பதி விநாயகர் ஆலய முன்றலில் இருந்து சிறப்பு ஊர்வலம் இடம்பெற்று தொடர்ந்து 9 மணிக்கு அம்மையாரின் நினைவாலய வழிபாடு, 9.10 மணிக்கு உருவச் சிலைக்கான கௌரவம், 9.30 மணிக்கு மண்டப நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். திருமுறை வழிபாடும் இடம்பெற்றதையடுத்து தொடர்ந்து வரவேற்புரையினை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான நிர்வாக சபை உப தலைவர் சி.அருளானந்தசிவம் வழங்குவதுடன் திருமுறை அர்ச்சனையினைத் துர்க்காபுரம் மகளிர் இல்ல பழைய மாணவிகள் வழங்கவுள்ளனர்.

ஆசியுரைகளை மாவை ஆதீன முதல்வர் மகாராஜ ஸ்ரீ.ச.இரத்தினசபாபதிக் குருக்கள், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் பிரதமகுரு சிவஸ்ரீ சு.செந்தில்ராஜக் குருக்கள், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

பிரதம விருந்தினராக வட மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை, வலி.வடக்கு பிரதேச செயலர் திருமதி.சிவகெங்கா சுதீஸ்னர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் நூற்றாண்டு மலர் வெளியீட்டின் முதற்பிரதியை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் தர்ம கர்த்தா சபைத் தலைவர் த.சித்தார்த்தன் பெற்றுக் கொள்ளவுள்ளார்.

அதனையடுத்து சிவத்தமிழ்ச் செல்வி பிறந்தநாள் அறநிதிய சபை வழங்கும் கல்வி நிதியத்தினை தெல்லிப்பழைக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் வே.அரசகேசரி, மருத்துவ நிதியத்தினை தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலை அத்தியட்சகர், புற்றுநோய் சிகிச்சைப்பிரிவு வைத்திய கலாநிதி ஏ.தேவநேசன் ஆகியோர் பெற்றுக்கொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து மல்லாகம் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலய மாணவர்கள் வழங்கும் கலை நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இறுதியாக நன்றியுரையினை துர்க்காதேவி தேவஸ்தான உப செயலாளர் இ.இராதாகிருஷ்ணன் நிகழ்த்தவுள்ளார். (6-8)

# முறைமை மாற்றத்தை புதிய ஆண்டில் ஆரம்பிப்போம்

## புத்தாண்டு செய்தியில் ஆளுநர்



(யாழ்ப்பாணம்)

மகிழ்வுடன் வரவேற்கும் புதிய ஆண்டில் "முறைமை மாற்றத்தை" நாம், எம்மில் ஒவ்வொருவரிடமிருந்தும் ஆரம்பிக்க வேண்டும் என்று விரும்புகின்றேன் எனப் புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

நேற்று ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட வாழ்த்துச் செய்தியிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

புத்தாண்டில் அடியெடுத்து வைக்கும் இந்த வேளையில் அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஆண்டு வடக்கு மக்கள் ஒவ்வொருவருக்கும் முன்னேற்றத்தைக் கொண்டு வரட்டும். புத்தாண்டு என்பது தனியே கொண்டாட்டத்துக்கான நேரம் மட்டுமல்ல. எங்கள் சிந்தனைகளைப் புதுப்பித்தலுக்கான தருணமும் கூட.

புதிய ஆண்டிலிருந்து எங்கள் பொதுச்சேவையை அன்பானதும் விரைவானதும் தரமானதுமாக மாற்றுவதற்கு நாம் ஒவ்வொருவரும் உறுதிபூண்டு "முறைமை மாற்றத்தை" ஆரம்பிப்போம்.

இந்த ஆண்டை எமது மாகாணத்துக்கு ஒரு குறிப்பிடத்தக்க இலக்கை அடைவதற்கான ஆண்டாக மாற்ற அரசியல் தலைமைத்துவத்தில் உள்ளவர்கள், அரச பணியாளர்கள், மக்கள் என நாம் அனைவரும் ஒற்றுமையுடன் பயணிப்போம் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (6-8)

# சங்குப்பிட்டி பாலத்தின் வேலைகளை பார்வையிட்ட

## இளங்குமரன் எம்.பி



(சாவகச்சேரி)

சங்குப்பிட்டிப் பாலத்தின் புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் மேற்படி பணிகளை நேற்று முன்தினம் திங்கட்கிழமை பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் பார்வையிட்டிருந்தார்.

சங்குப்பிட்டிப் பாலத்தின் புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், அங்கு தரமற்ற வேலைகள் நடைபெறுவதாக சிலர் குற்றச்சாட்டுகளை முன் வைத்திருந்தனர்.

இந்நிலையிலே குறித்த பகுதிக்கு விஜயம் செய்த பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன், வேலைகளின் தரம் குறித்தும் மூலப்பொருட்களின் தரம் குறித்தும் பார்வையிட்டதுடன் வேலையில் ஈடுபட்டவர்களுடனும் கலந்துரையாடியிருந்தார். (6-8-30)

# கைத்தொழில் முயற்சியாளர்கள் மாவட்ட செயலகத்தில் கௌரவிப்பு



(யாழ்ப்பாணம்)

தேசிய ரீதியில் சிறந்த கைத்தொழில் முயற்சியாளராகத் தெரிவு செய்யப்பட்டோருக்கான கௌரவிப்பு நிகழ்வானது கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் மாகாணப் பணிப்பாளர் சி.சிவகெங்காதரன் தலைமையில் நேற்று முன்தினம் யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் தேசிய ரீதியாக சிறந்த தொழில் முயற்சியாளர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் நுண்ணிய சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கிடையில் கோரப்பட்டு அவற்றில் யாழ்.மாவட்ட ரீதியாக துறைசார்ந்த ரீதியில் வெற்றி பெற்ற 15 தொழில் முயற்சியாளர்களுக்கான சான்றிதழ்கள் தொழில்நுட்ப மாற்றுப் பயிற்சியில் கலந்து கொண்ட 40 பயிற்சியாளர்களுக்கான சான்றிதழ்களும் விருந்தினர்களால் வழங்கி வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் க.சிறிமோகனன், திட்டமிடல் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன், உதவி மாவட்டச் செயலாளர் செல்வி உ.தர்சினி, கைத்தொழில் அபிவிருத்திச் சபை மாவட்டப் பிரதிப்பணிப்பாளர் க.சசிதரன், உத்தியோகத்தர்கள் மற்றும் தொழில் முயற்சியாளர்கள் கலந்துகொண்டார்கள். (6-8-33)

# மாணவர்கள் எதிர்கொள்ளும் சுகாதார நெருக்கடி தொடர்பில் ஆராய்வு



(யாழ்ப்பாணம்)

உடற்கல்வி டிப்ளோமா ஆசிரிய சங்கத்தின் தலைவருக்கும் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரனுக்கும் இடையில் நேற்று முன்தினம் கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் பாடசாலை மாணவர்கள் எதிர்நோக்கும் சுகாதார [illegible] சவால்களை நிவர்த்தி [illegible] மாறு வேண்டுகோள் விடப்பட்டது. பாடசாலையின் சிற்றுண்டிச் சாலையின் தரத்தை உயர்த்துதல், விரைவு உணவுகளையும் எண்ணெய் உணவுகளையும் பொரிசெய்த உணவுகளையும் தடைசெய்தல், கழிப்பறை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து தூய்மைப்படுத்தல், தூய நீரினை உறுதிப்படுத்தல், பெண் பிள்ளைகள் மத்தியில் அதிகரித்துள்ள ஈமோகுளோபின் குறைபாடு, கட்டிளமைப் பருவ உணவுப் பழக்கம் என்பன பற்றிக் கலந்துரையாடப்பட்டன.

குறித்த விடயங்கள் தொடர்பில் 2025 ஆம் ஆண்டு தீவிர நடவடிக்கை எடுக்கப்படும் என பிராந்திய சுகாதார சேவைப் [illegible] (6-8)

# ரயிலுடன் மோதுண்டு பெண் ஒருவர் படுகாயம்

## மிருசுவிலில் சம்பவம்

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மிருசுவிலில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை ரயிலுடன் மோதுண்டு குடும்பப் பெண் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து பயணித்த புகையிரதத்துடன் மிருசுவில் பிரதேச வைத்திய சாலையை அண்மித்து ரயில் பாதையில் சென்ற பெண்ணே ரயிலுடன் மோதுண்டு படுகாயமடைந்துள்ளார்.

இதில் கொடிகாமம் தவசிகுளம் பகுதியைச் சேர்ந்த 49 வயதான குடும்பப் பெண்ணே படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (6-8-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல் கொள்வனவிற்கு சலுகை வட்டி வீதத்தில் கடன்

## அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

சிறு மற்றும் நடுத்தர நெல் ஆலை உரிமையாளர்களுக்கு அரச வங்கிகள் ஊடாக சலுகை வட்டி வீதத்தில் அடகுக் கடன் வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நிதி திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் என்ற அடிப்படையில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (நி-8)

# புதிய விரிவுரையாளர்களை இணைக்க மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுமதி

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களுக்கு புதிய விரிவுரையாளர்களை இணைத்துக் கொள்ள பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பிரதமர் ஹரிணி அமரசூரியவுடன் கலந்துரையாடிய பின்னர் இதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டதாக அதன் தலைவர் பேராசிரியர் கபில செனவிரத்ன தெரிவித்தார்.

தற்போது வெற்றிடமாகவுள்ள விரிவுரையாளர்களில் 50 வீத மானவர்களை சேவையில் இணைத்துக் கொள்வதற்கு இதன்போது இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)

## வாழ்த்துத் தெரிவிக்கும்போது

# பரிசுப் பொருட்களை வழங்க வேண்டாம்

## பிரதிப்பொலிஸ்மா அதிபர்

(கொழும்பு)

எதிர்வரும் புத்தாண்டு அல்லது வேறு விசேட தினங்கள் மற்றும் பண்டிகைகளின் போது வாழ்த்துத் தெரிவிப்போம்.

அதன்போது உயர் பொலிஸ் அதிகாரிகளுக்குப் பரிசுப் பொருட்களை வழங்க வேண்டாம் என பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார். இது தொடர்பிலான விசேட சுற்று நிருபம் ஒன்றையும் அவர் வெளியிட்டுள்ளார்.

இவ்வாறான பண்டிகை நாட்களில் உயர் அதிகாரிகளுக்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் பரிசுப் பொருட்களுடன் வாழ்த்து கூறுவது வழமையாகியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் இனிவரும் காலங்களில் அவ்வாறு பரிசுப் பொருட்களை வழங்க வேண்டாம் என அவர் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

தாம் உள்ளிட்ட ஏனைய சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு வாழ்த்துக் கூற வேண்டுமாயின் தொலைபேசி அழைப்பு அல்லது குறுஞ்செய்தி ஊடாக வாழ்த்துக்களை பரிமாறிக் கொள்ள முடியும் என பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார். (நி-8)

# ரின்மீன்களுக்கான வற்வரியை குறைக்குமாறு வலியுறுத்து

(கொழும்பு)

ரின்மீன் மீது விதிக்கப்பட்டுள்ள பெறுமதி சேர் வரியை குறைக்குமாறு இலங்கை ரின்மீன் உற்பத்தியாளர்கள் சங்கம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

ரின்மீன்களுக்குக் கட்டுப்பாட்டு விலையை விதிப்பது பிரச்சினை இல்லையென்றாலும், அவற்றின் மீது விதிக்கப்பட்டுள்ள வற் வரியை குறைக்க அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென தலைவர் ஷிரான் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

வற் வரி குறைக்கப்படாவிட்டால் அதன் விளைவை மீனவர்கள் அனுபவிக்க நேரிடும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதற்கு பதிலளித்த நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் ஹேமந்த சமரகோன், சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினருடனும் இணக்கம் காணப்பட்டதன் பின்னரே ரின்மீன்களுக்கான கட்டுப்பாட்டு விலை அமுல்படுத்தப்பட்டதாகக் குறிப்பிட்டார். (நி-8)




கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ்

## வாழ்வதற்கு வழி சமைக்க வந்து நிற்கும் வருடம் அதைப் போற்றிடுவோம்!

உலகமெலாம் ஒளி விளங்கி உயர்வதற்காய்
ஒப்பற்ற புதுவருடம் பிறந்ததம்மா!
நலம்மிகுந்து மாந்தரெலாம் மகிழ்வு கொள்ள
நானிலத்தில் புதுவருடம் பிறந்ததம்மா!
வளம்மிகுந்து தேசமெலாம் நிறைவுகொள்ள
வரம் அருளிப் புதுவருடம் பிறந்ததம்மா!
தலமதனில் மானுடமும் நிமிர்வு கொள்ள
தன்னிகரில் புதுவருடம் பிறந்ததம்மா!

ஆயிரமாய் வேற்றுமைகள் இருந்த போதும்
அனைவருமே நிர்வாகம் தொடங்கும் இந்த
நேயமிகு புத்தாண்டின் உயர்வைப் போற்றி
நெஞ்சத்தால் வாழ்த்துக்கள் உரைத்து நிற்போம்.
போய் உதிர்ந்து தீமையெலாம் விலகிச்சாய
பொல்லாத அரக்க குணம் மாய்ந்து தேய
ஓய்வதின்றி அறம் வளர்க்க புதிய ஆண்டு
ஒப்பற்ற வழி திறக்கும் உயிர்க்கும் வையம்.

மதங்களெலாம் ஒன்றான இறையைத் தம்மின்
மாண்புயர வெவ்வேறாய் உரைத்து நிற்கும்.
விதவிதமாய் இறைநாமம் பலவாய்ச் சொல்லி
வேற்றுமைகள் காட்டிடினும் அனைத்தும் ஒன்றாம்.
உதவுகிற மனத்தாலே உயிர்கட்கெல்லாம்
உண்மை அருள் செய்திட்டால் உலகைக் காப்போன்
இதந்தருவான் அனைவர்க்கும் இதுவே உண்மை
ஏற்றமிகு வழிபாடாம் இதயங் கொள்வீர்!

உயிரனைத்தும் புத்தாண்டில் உயர்வு கொள்ள
ஒப்பற்ற இறைப் பொருளை வேண்டி நிற்போம்
வயிரமென ஒளிருகிற அறிவால் நல்லோர்
வாழ்வுயர எந்நாளும் துணைகள் செய்வோம்.
பயிர்களோடு புல் பூண்டும் உலகில் வாழ
பரிவோடு கருணையினைப் பொழிந்து அன்பால்
உயர்வதனைப் பேணித்தான் உளத்தில் நல்ல
உண்மை ஒளி உண்டாக வாழ்ந்து நிற்போம்.

காலமதைக் கடவுளென போற்றும் எங்கள்
கனமான நற்தமிழர் வாழ்வுதானே
ஞாலமெலாம் உயர்ந்தவற்றை ஈந்து நின்று
நலம்புரியும் எம் தமிழர் வாழ்வு தானே
சீலமொடு நோன்பு பல காத்து நின்று
செகம் காக்கும் உயர்தமிழர் வாழ்வு தானே
வாழ்வதற்கு வழி சமைக்க வந்து நிற்கும்
வருடம் அதைப் போற்றிடுவோம் தமிழர் நாமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுவருடம் புத்துயிர்ப்புடன் புதுமை சேர்க்குமா?



**பேராசிரியர் கு.மிகுந்தன்**
விவசாய உயிரியல்துறை,விவசாய பீடம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

புது வருடம் பலவிதமான எதிர்பார்ப்புக்களுடன் பிறக்கின்றது. புதுமைகள் செய்யாவிட்டாலும் அனைவரும் நோய்நொடியின்றி வாழ ஊட்டச்சத்தான உணவாகவும் கிடைத்தல் வேண்டும். பசுமை இலங்கை என்னும் கருத்தை அடித்தளமாக வைத்து இவ்வாண்டை புத்துயிர்ப்புடன் வரவேற்க தயாராகின்றனர். ஒவ்வொரு நாளுமே புதுமையானதென்றாலும் இவ் வருடத்துடன் பிறக்கும் கருத்துக்களும் புதுமையை காணத்தலைப்படுகின்றன.

பசுமையான தேசம் பற்றிய எண்ணம் மக்களுக்கான உணவை உற்பத்தி செய்வதிலும் அனைவருக்கும் உணவு கிடைப்பதனை உறுதிசெய்வதிலும் மேலும் சுகதேகிகளாக வாழ ஊட்டச்சத்தான உணவை கிடைக்கச் செய்வதிலும் உள்ளார்ந்திருக்கின்றது. உற்பத்தி பெருக்கமடைதல் இன்றியமையாததுடன் அனைவருக்கும் உணவு என்பது இங்கே பசி பஞ்சமற்ற தேசத்தை உருவாக்க முனையும். ஆபிரிக்க நாடுகளில் குறிப்பாக சூடான் நாட்டில் பசிபஞ்சம் தலைவிரித்தாடும் நிலைமை அனைவருக்கும் நல்ல பாடமாக அமைந்திருக்கின்றது.

எமது நாட்டில் விவசாய உற்பத்தி மேலோங்க வேண்டும். பேண்தகு அபிவிருத்தியை நோக்கிய திட்டங்களும் முழுவதுமாக உள்வாங்கப்படல் அவசியம். ஐக்கிய நாடுகள் தாபனத்தின் 17 பேண்தகு அபிவிருத்திக்கான இலக்குகள் 2030 ஆம் ஆண்டளவில் நிறைவேற்றப்படல் வேண்டும் என்னும் தீர்மானத்திற்குள் பல நாடுகள் தமது உற்பத்தி பொருளாதார கட்டமைப்புக்களை வடிவமைத்து திட்டங்களை நகர்த்திக் கொண்டிருக்கின்றன. கடந்த வருடம் விடுபட்ட பல திட்டங்களும் அவற்றினால் ஏற்படும் நன்மைகளும் மக்களை சென்றடைதலை உறுதிசெய்தல் அவசியம்.

கடந்த கால தவறுகள் இனங்காணப்பட்டு தேசத்தின் உணவுற்பத்தியை மையப்படுத்திய ஆக்கபூர்வமான திட்டங்கள் செயற்படுத்தப்படல் வேண்டும். எமது உணவுற்பத்தி மக்களின் தேவையை பூர்த்தி செய்வதனை மையப்படுத்தியதாக அதிலும் அவர்களது சுகாதாரத்தினை மேம்படுத்துவதாக அமைதல் வேண்டும். எமக்கான வளங்கள் அனைத்தும் இனங்காணப்பட்டு அவற்றில் தொழில்நுட்பத்தை உட்புகுத்தி உற்பத்தி எமக்கான அந்நிய செலாவணியை ஈட்டக்கூடியதாகவும் விரிவுபெறல் வேண்டும்.

கணனி மற்றும் இணையத்தளங்களின் செய்திப்பரிமாற்றம் பல புதிய நுட்பங்களை விவசாய செய்கையில் உட்புகுத்தியிருக்கின்றது. இன்னமும் அது சார்ந்து செயற்கை நுண்ணறிவின் பயன்பாடும் பல விதங்களில் விரிவாக்கம் பெற்றுள்ளது. விவசாயச் செய்கையில் வேலையாட்கள் அரிதாக கிடைக்கும் தன்மை மற்றும் அவர்கள் செய்யும் தொழில்களை வினைத்திறனாக தரமானதாக செய் வதற்கான காலம் கனிந்து வந்து கொண்டிருக்கின்றது.

துல்லியமாக பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றை பெறப்படும் தகவல்கள் அடிப்படையில் சீர் செய்யும் வழிவகைகளை செயற்கை நுண்ணறிவின் மூலம் செயற்படுத்தும் நடைமுறைகள் விவசாய செய்கையில் இனிவருங்காலத்தில் ஏற்படப்போகும் மாற்றம் எனலாம்.

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...




பாரம்பரிய நடைமுறைகளுடன் இயந்திரங்களின் பாவனை விவசாய செய்கையில் பாரியளவில் மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. அவற்றினது வருகையின் மூலம் விவசாய செய்கை எளிமையாக்கப்பட்டு உற்பத்தியின் செலவில் விவசாய இயந்திரங்களின் பாவனை முக்கிய பங்கு வகிக்கத் தொடங்கி விட்டது.

இருப்பினும் பயிர் செய்கை மற்றும் பண்ணை முகாமைத்துவ முறைகள் இலகுவாக்கப்பட்டு பயிர்ச் செய்கையும் பண்ணை நிர்வாகமும் வினைத்திறனாக மாற்றப்பட்டிருக்கின்றது. இயந்திரங்களின் பாவனையால் விவசாய செய்கையில் அதிக லாபத்தை பெறுவதற்கான வாய்ப்புக்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. உற்பத்தியின் தரம், அவற்றை களஞ்சியப்படுத்தல் மற்றும் உற்பத்திப் பொருட்களை மதிப்பேற்றஞ் செய்தல் என அவற்றின் பெறுமதியில் பல்வகைத்தன்மையும் அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த மாற்றங்கள் இதுவரையில் பயிருற்பத்தியில் விசேட பயன்பாடாக இருந்தாலும் இன்னும் மாற்றங்களை உட்புகுத்தும் நிலைமைக்கு விவசாய செய்கை வந்திருக்கின்றது.

காலநிலை மாற்றம் பயிருற்பத்தியில் அதீத பாதிப்பை ஏற்படுத்துகின்ற காரணியாக சமகாலத்தில் மாற்றம் பெற்றதிலிருந்து இன்னமும் அதீத தொழினுட்பத்தின் தேவை எதிர்பார்க்கப்பட்டதொன்றாகி விட்டது. காலநிலை மாற்றத்தை துல்லியமாக அறிதலின் மூலம் அதனால் பயிருற்பத்தியில் ஏற்படுத்தப்படும் தாக்கத்திலிருந்து விடுபட அல்லது மீளவேண்டிய தேவை எழுந்திருக்கின்றது. எதிர்பாராத வறட்சி, அதீத வெள்ளப்பெருக்கு வளிவெப்பநிலை தொடர்ச்சியாக அதிகரிப்பு நீண்ட இரவுநேர குளிர் காலம் என இயற்கையின் சீற்றங்களை அண்மைக்காலங்களில் பலநாடுகளில் காணமுடிகின்றது. எமது தேசத்திலும் இந்த தாக்கங்கள் பரந்துபட்டு அதிகளவில் ஏற்படுவதனை நாம் உணரத்தலைப்பட்டிருக்கின்றோம்.

பயிரழிவுக்கு முக்கிய காரணியாக மாறியிருக்கின்ற காலநிலையின் தரவுகள் துல்லியமாக அறிந்துணரப்பட்டு மண்ணின் தன்மை அதிலுள்ள நீரின் அளவு, தேவையான சேதனப்பொருட்களின் இருப்பு, அதிலுள்ள கார அமிலத்தன்மை, அகத்துறிஞ்சக் கூடிய பசளையின் அளவு, பீடைகள் மற்றும் நோய்களின் தாக்கம், களைகளின் அதீத பெருக்கம் இப்படி இன்னோரன்ன காரணிகளில் பயிர்ச்செய்கை தங்கியிருக்கும் நிலையில் செயற்கை நுண்ணறிவு (Artificial intelligence) ,இணைய உலகம் (Internet of Things- IoT), மற்றும் இயந்திரவழி கற்றல் (Machine Learning) என்பன தற்போது விவசாய செய்கையில் பயன்படுத்துவதற்கு உலகம் தயாராகி விட்டது.

தானியங்கி பொறிமுறைகளை (Automated Mechanism) முழுவதுமாக பயன்படுத்தும் இவற்றினால் தேவையான அனைத்து தகவல்களையும் தேவையான உணரிகளைப் (Sensors) பயன்படுத்தி இணையவழி தகவல் சேமிப்பு பொறிமுறை (Cloud) மூலம் பெற்று அவற்றை அலசி ஆராய்ந்து அதற்கான தீர்வையும் செய்து முடிக்கும் திறனை இவை கொண்டிருக்கின்றன.

இம்மாதிரியான தொழில்நுட்பத்துடனான விவசாய பெருமக்களுக்கான சேவை அண்டை நாடுகளில் எப்போதோ ஆரம்பித்து விட்டது. இவ்வாறான கணனி மற்றும் இணையவழி செய்திகளைப் பயன்படுத்தி செல்பேசி தொழில் நுட்பத்தையும் அதனுடனிணைத்து விவசாயப் பெருமக்களை இணையவழி இணைப்பில் வைத்திருந்து விவசாய நடை முறைகளை செய்வதற்கு அவர்களுக்கு உதவலாம். மேலும் தற்போது பலரும் தகவல் தொழில் நுட்பம் மற்றும் கணனி பற்றிய அறிவு அத்துடன் செயற்கை நுண்ணறிவு என்பவற்றில் ஆர்வம் காட்டுவதனால் அவர்களுக்கான வேலைவாய்ப்பாகவும் இதனை மேற்கொள்ளலாம்.

காலநிலை மாற்றம் அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளை உணரிகள் போன்றவற்றை பயன்படுத்தி தேவையான தகவல்களைப் பெற்று அதிலிருந்து காலநிலை மாற்றம் பற்றிய எதிர்வுகூறல்களை மேற்கொள்வதோடு அவற்றிலிருந்து விவசாய பெருமக்களுக்கு தேவையான எதிர்வுகூறல்களை முன்கூட்டியே அவர்களுக்கு இலகுவழியில் கிடைக்கக்கூடியதாக புரிந்து கொள்ளக் கூடியதாகவும் ஏற்படுத்திக் கொண்டால் அது நிச்சயம் விவசாய பெருமக்களுக்கு மிகவும் பயனுள்ளதாகும்.

விவசாய பெருமக்களையும் கிராமத்தையும் நோக்கி உயர் நுட்பங்கள் நகர்த்தப்பட்டால் இன்னும் அவற்றின் பயன்பாடு எமது மக்களுக்கு கிடைக்கும். இவ் வருடத்தின் எதிர்பார்ப்பு விவசாயத்தையும் விவசாயம் சார்ந்த தொழில்களையும் டிஜிற்றல் செயற்பாட்டுக்கு இட்டுச் செல்லுமா? அதற்கான ஆக்கபூர்வமான செயறறிட்டங்களை மக்கள் எதிர்பார்த்திருக்கின்றனர்.

எமது தேசம் மீண்டும் பொருளாதாரத்தில் சிறந்த நாடாக மிளிர அனைத்துவகை செயற்றிட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்னும் மக்களின் எதிர்பார்ப்பு நிறைவேறும் நாளை இவ்வருட ஆரம்பத்திலிருந்து எதிர்பார்த்திருப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயிகளின் போராட்டத்தால் பஞ்சாப்பில் இயல்பு நிலை பாதிப்பு



(டில்லி)

பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலைக்கு சட்டப்பூர்வ உத்தரவாதம் வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி பஞ்சாப்பில் விவசாய சங்கங்கள் நடத்தி வரும் போராட்டம் காரணமாக மாநிலத்தில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளின் கோரிக்கைகளை நிறைவேற்றக்கோரி கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் விவசாயி ஜக்கித் சிங் தலேவாலுக்கு ஆதரவாக இந்தப் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

போராட்டம் காரணமாக மாநிலம் முழுவதும் 221 ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 157 ரயில்கள் இரத்து செய்யப்பட்டுள்ளதாகவும் 14 மணிநேர ரயில் அட்டவணையில் மாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதையடுத்து, பேருந்து போக்குவரத்தும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

ஜலந்தர், மொஹாலி, ஷாம்பு உள்ளிட்ட பல மாநகரங்கள் மற்றும் நகரங்களில் உள்ள பெரும்பாலான தேசிய நெடுஞ்சாலைகள் மூடப்பட்டிருப்பதால், வெளியூர் செல்லும் பயணிகளும், அலுவலகம் செல்வோரும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

போராட்டம் காரணமாக பல பாடசாலைகள் மற்றும் அலுவலகங்களுக்கும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. (நி-8)

# ஆற்றில் கவிழ்ந்த லொறி 71 பேர் ஸ்தலத்தில் உயிரிழப்பு

## திருமண நிகழ்வுக்கு சென்றபோது எத்தியோப்பியாவில் சோகம்

(அடிஸ் அபாயா)

எத்தியோப்பியாவில் ஆற்றில் லொறி கவிழ்ந்த விபத்தில் 71 பேர் உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

எத்தியோப்பியா நாட்டின் கிராமப் பகுதிகளில் திருமணங்கள் உள்ளிட்ட நிகழ்ச்சிகளுக்கு பேருந்துகளை வாடகைக்கு எடுத்து செல்வதற்கு பதிலாக லொறியில் செல்வதை வழக்கமாக கொண்டுள்ளனர். லொறியில் பயணம் செய்தால் செலவு குறைவு என்பதால் மக்கள் இவ்வாறு பயணம் மேற்கொண்டு வருகின்றனர்.

அந்தவகையில், தெற்கு எத்தியோப்பியாவின் சிடாமா பகுதியில் திருமண நிகழ்வுக்காக லொறி ஒன்றில் 70 இற்கும் மேற்பட்டோர் சென்று கொண்டிருந்தபோது தலைநகர் அடிஸ் அபாபாவிற்கு தெற்கே சுமார் 300 கிலோமீற்றர் தொலைவில் உள்ள சிடாமா மாநிலத்தில் ஆற்றில் லொறி கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. சம்பவ இடத்திற்கு விரைந்த மீட்பு படையினர் உள்ளூர் மக்கள் உதவியுடன் மீட்பு பணி மேற்கொண்டனர்.

இந்த விபத்தில் 71 பேர் உயிரிழந்தனர். மேலும் சிலர் படுகாயம் அடைந்துள்ளனர். அவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த விபத்து தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-8)









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறைபடியா கரங்களாலே சிறந்த சேவை வழங்க முடியும்

## முல்லையில் ஆளுநர் தெரிவிப்பு

(முல்லைத்தீவு)

கறைபடியாத கரங்க ளுடன் இருந்தால்தான் பொதுமக்களுக்கு சிறப்பான சேவையைச் செய்ய முடியும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண விவசாய அமைச்சும், முல்லைத்தீவு மாவட்டச் செயலகமும் இணைந்து நடத்திய உலக மண் தினம் மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

சகல வளமும் கொண்டது எங்கள் நாடு. அதைப்போல எமது மாகாணமும் சகல வளங்களையும் காலநிலையையும் கொண்டிருக்கின்றது. அப்படியான எமது மாகாணத்தில் விவசாயிகள் தங்களை இன்னமும் ஏழை விவசாயிகள் என்று விளித்துக் கூறிக்கொண்டிருக்கின்றனர்.

விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டும். அவர்களுக்கு நவீன முறைமையிலான விவசாயத்தை அறிமுகப்படுத்த வேண்டும். அவர்களின் உற்பத்தியையும், அதன் தரத்தையும் ஊக்குவிக்கவேண்டும்.

புதிய அரசாங்கம் மக்கள் நேய சேவையைக் கொண்டு செல்லவே விரும்புகின்றது. அரச அதிகாரிகள் அதற்கு ஏற்றவாறு தங்களை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று ஆளுநர் குறிப்பிட்டார்.

இந் நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலர் இ.இளங்கோவன், வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலர் ஆ.சிறி ஆகியோர் கலந்து கொண்டனர். இதன்போது உலக மண் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. (6-8)

லங்கா மஹால் (PVT) LTD
உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.
(354)
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு :
00919566156719
Western Union WU MoneyGram Ria Money Transfer
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 350 | 400 | 350-450 | 320 |
| உருளைக்கிழங்கு | 250 | 230 | 220 | 250 |
| பச்சைமிளகாய் | 1200 | 1200 | 1000-1200 | 1000 |
| தக்காளி | 400 | 400 | 350-400 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 250 | 150-180 | 200 |
| கோவா | 200 | 250 | 270 | 400 |
| கரட் | 250 | 400 | 250 | 450 |
| பூசணி | 130 | 200 | 200 | 250 |
| புடோல் | 160 | 200 | 200 | 300 |
| வாழைக்காய் | 150 | 150 | 100-150 | 250 |
| சின்ன வெங்காயம் | 350 | 350 | 150-400 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 220 | 380 | 300 |
| பாகற்காய் | 800 | 1000 | 1000 | 1000 |
| வெண்டக்காய் | 200 | 200 | 250-280 | 300 |
| கருணைக் கிழங்கு | 120 | 160 | 150 | 200 |
| பயற்றங்காய் | 400 | 200 | 300-350 | 400 |
| லீக்ஸ் | 350 | 350 | 300 | 480 |
| பீற்றூட் | 350 | 400 | 350 | 600 |
| கறிமிளகாய் | 820 | 700 | 700 | 800 |
| முருங்கைக்காய் | -- | 1000 | -- | -- |
| போஞ்சி | 300 | 400 | 400-500 | 500 |
| கத்தரிதம்புள்ள | 300 | 350 | -- | 300 |
| கீரை - 1 பிடி | 140 | 150 | 150-200 | 250 |
| தேசிக்காய் | 300 | 200 | 350-550 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 150 | 80-180 | 150-200 |
| இராசவள்ளி | -- | 800 | 800 | 700 |
| வெங்காயப்பூ | 600 | 800 | -- | -- |
| முள்ளங்கி | 200 | 200 | 150-200 | 400 |
| பொன்னாங்காணி | 120 | 150 | 100 | 80 |
| வல்லாரை | 60 | 100 | 80 | 100 |
| ஈரப்பலா | 50 | 100 | 90 | 240 |

# உலகம் வாழத் தில்லையிலே ஆனந்தக் கூத்தன் திருநடனம் ஆடுகின்றான் இலங்கை வாழ காரைநகர் ஈழத்திலே கூத்தன் ஆடுகின்றான்


ஸ்ரீ மாணிக்கவாசகர்

திருஞானசம்பந்தர் 872 ஆவது பதிவு ஓதுவோம் எல்லாத் துன்பமும் தீரும்.

கோண்நாக அணையானும் குளிர்தா மரையானும்

காணார் கழல் ஏத்தக் கனலால் ஓங்கினான்

சோணார் வாழ்தில்லைச் சிற்றம் பலம் ஏத்த

மாணா நோய் எல்லாம் வாளா மாயுமே.

இறைவனின் திருவடியை நினைந்து தொழுது ஏத்து சிற்றம்பலத்தின் கண் திரு நடனம் புரியும் எம்பெருமானை வழிபட்டு ஏத்திப்போற்ற மாணா நோய் எல்லாம் வாளா மாயுமே. எல்லாத் துன்பம் நீங்கவும் ஈழத்துச் சிதம்பரம் கும்பாபிஷேகம் நடைபெறவும் மார்கழித் திண்ணபுரச் சிவன் திருவெம்பாவும் ஐந்து தேரும் வீதி வலம் வரவும், இலங்கையிலுள்ள சைவரெல்லாம் விழாக்காண வரவும், தில்லைத் தலத்தில் நடராசப் பெருமானது ஆதிரை விழா முறை தவறாது இங்கு சிறப்பாக நடைறெவும் 2025 ஆம் ஆண்டு இலங்கை மக்களும் உலக மக்களும் திருவாசகம் ஓதுவோம்.

ஆலயம் வரும் அடியவர்களின் பசிப் பிணியைத் தீர்க்கும் திருவாவடுதுறை ஆதீனத்தின் **"ஞானச்சுடர் நிலையம்"** எனும் விருது பெற்ற அடையாக்கதவாக அன்னதானப் பணி தொடரவும் ஆலய ஆதீன கர்த்தாவினரால் முதலாக நம் முன்னோர் காலம் காலமாக பொலிவுடன் **மாணிக்கவாசகர் மடாலயத்தையும் பணி சிறப்பாக அமை யவும் திருவாகம் ஓதுவோம்.**

**பிறவிப் பிணியை நீக்கும் ஈழத்துச் சிதம்பரத் தில்லை கூத்தனையும் பசிப்பிணியை நீக்கும் மாணிக்கவாசகர் மடாலயத்தையும் வழிபடுவோம்.**

**ஈழத்துச் சிதம்பரத்தின் தலம், தீர்த்தம், மூர்த்தி என்னும் மூன்றினதும் பெருமைகளைக் கூறிப் பக்தியை வளர்க்கும் தெய்வீக வரலாற்றையும் நம் முன்னோர்** திருத்தொண்டுகளையும் நினைவு கூர்தலும் திருமுறை திருவாசகம் ஓதுதலும் ஆலய மஹா கும்பாபிசேகமும் , தில்லைத் திருத் தலத்திலே நிகழ்வது போல திண்ண புரத்திலும் நடராசப் பெருமானது ஆதிரை விழாவினை முன்னிட்டு வளம் மிக்க இலங்கை மாநகரில் வாழ்கின்ற சைவ மக்கள் எல்லோரும் அவ்விழாவையும் தரிசிக்க வருவார்கள். வந்து நீங்கா, **அல்லர் தவிர் கூத்தன்-** விட்டு நீங்காத துன்பங்களை யெல்லாம் நீக்கு கின்ற கூத்தப் பெருமானது வடிவழகை விழி அமைய ஆரக்கண்டு- தேரில் எழுந்தருளி வருகின்ற மிக்க அழகைக் கண்கள் கொள்ள நிறைவாகக் கண்டு ஐந்து தேரும் வீதி வலமாகச் சுற்றிவரும் காட்சி, தில்லையிற் போலத் திண்ணபுரம் ஈழத்துச் சிதம்பரத்தில் திருவெம்பாவை விழாவையும், திருவாதிரைத் திருநாளிற் திருமு முக்கும் அதனோடு சேர்த்து வழிபாடு நிகழும் அந்தக் காட்சியை குற்றமற்ற சிவதொண்டர்கள் பலகோடிக் கணக்கினர் என்று சொலத் தக்கவர்கள், வந்து தமது இருகண்களாலும் முகந்து பருகுவார்கள்.

முற்பிறவிகளிற் செய்து கொண்ட நல்வினைப் பயனையுடையவர்களும், தவத்தை முயன்று செய்பவர்களும், எந்தைப் பேற்றைத்தான் பெறார்? **எல்லாம் பெறுவர் ஓம் நமசிவாய.** திண்ணபுரத்தில் ஞாயிறு தோன்றும் காட்சி

***திண்ண மாபுரச் செல்வன் நுதல் வழி***
***புண்ணியர்க்கிருள் போக்க திறந்தென***
***மண்ணின் மூடிய மாலிருள் நீங்கிட***
***விண்ணின் வானவன் கீழ்த்திசை***
***மேவான்***

திண்ணபுரத்துத் திருவருட் செல்வராகிய சுந்தரேசுவரப் பெருமான் நல்வினையாளருக்கு அவரைப் பீடிக்கும் ஆணவ இருளைப் போக்கும் பொருட்டு நெற்றிக் கண்ணைத் திறந்து பார்த்தாற் போல் பூமியின் மேல் மூடிக்கிடக்கும் கரிய இருள் நீங்குமாறு **ஞாயிறு கிழக்குத் திக்கில் ஆகாயத்தினிடமாக வெளிப்படுவான்.**

திண்ணபுரத்திலுள்ள புறவிருளை நீக்குதற்கு ஞாயிறு கிழக்குத் திக்கில் எழுதல் சுந்தரேசப் பெருமான் புண்ணியப் பேறுடையவர்களின் அகவிருளை நீக்கி அருள் செய்யும் பொருட்டு நெற்றிக் கண்ணால் நோக்கியது போலும் என்றது **உவமையணி.** நக்கீரருடைய அறியாமையால் வந்த செருக்கை நிக்கியதும். அறியாமையால் மலரம்பு தொடுத்து மன்மதனை எரித்தபின் அருள் செய்ததும் இறைவனது நெற்றி விழியாதலின் **இருள் போக்கத் திறந்தான்** என்றார்.

சிவபெருமானுக்கு செய்யப்படும் சிவ புண்ணியங்கள் சிவாகம விதிப்படி உள்ளத்தில் அன்பும் வேண்டும். அன்பு விதைபோன்றது.

அன்பால் அர்ச்சனையாக திருமுறைகள் திருவாசகம் ஓதி சிவபுண்ணியங்களே பிறவியிலிருந்து நம்மை மீட்கவல்லன்.

**பிறவிப்பிணியை நீக்க தில்லைக் கூத்தன்**

பசிப்பிணியை நீக்க மாணிக்கவாசகர் மடாலயம்

(சி-1921)

**க.கு.க.சிவபாலன்**
**அடியார்க்கு அமுதூட்டும் அண்ணலார்**
**பாஞ்சசன்யம், தேச அபிமானி, தேசபந்து,**
**போசகர் ஈழத்துச் சிதம்பரம், மாணிக்கவாசகர் மடாலயம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2025 புத்தாண்டு பொதுப் பலன்கள்

| | | | |
|---|---|---|---|
| ராகு | | குரு (வ) | |
| சனி சுக் | 01.01.2024 | | செவ் (வ) |
| | புதுவருட கிரகநிலை | | |
| சூரி சந் | புதன் | | கேது |

நிகழும் மங்களகரமான ஸ்வஸ்திஸ்ரீ பல்லவ வருடம் - தக்ஷிணாயம் - ஹேமந்த ரிது - மார்கழி மாதம் 16 ஆம் நாள் பின்னிரவு 17 ஆம் நாள் முன்னிரவு அன்றைய தினம் தினசுத்தி அறிவது சுக்லபக்ஷ பிரதமை - செவ்வாய்க் கிழமை பின்னிரவு புதன்கிழமை முன்னிரவு - பூராடம் நட்சத்திரம் - சித்தயோகம் - கன்னியா லக்னம் - தனுர் சந்திரா லக்னம் - ரிஷப நவாம்சம் - விருச்சிக சந்திர நவாம்சமும் கூடிய சுபயோக சுபதினத்தில் உதயாதி நள்ளிரவு 12.00 மணிக்கு 2025 ஆம் ஆண்டு பிறக்கிறது.

ராசிநிலை - பாதசார விபரம் - லக்னம் - ஹஸ்தம் 2 ஆம் பாதம் - சந்திரன் சாரம் / சூரியன் - பூராடம் 1 ஆம் பாதம் - சுக்கிரன் சாரம் / சந்திரன் - பூராடம் 4 ஆம் பாதம் - சுக்கிரன் சாரம் / செவ்வாய் (வ) - பூசம் 1 ஆம் பாதம் - சனி சாரம் / புதன் - கேட்டை 4 ஆம் பாதம் - புதன் சாரம் / குரு (வ) - ரோகினி 3 ஆம் பாதம் - சந்திரன் சாரம் / சுக்கிரன் - அவிட்டம் 4 ஆம் பாதம் - செவ்வாய் சாரம் / சனி - சதயம் 2 ஆம் பாதம் - ராகு சாரம் / ராகு - உத்திரட்டாதி 1 ஆம் பாதம் - சனி சாரம் / கேது - உத்திரம் 3 ஆம் பாதம் - சூரியன் சாரம்

**செவ்வாயின் ஆதிக்கம் பெற்ற எண் 2025:** இந்த வருடத்தின் கூட்டு எண்: 2 + 0 + 2 + 5 = 9. ஒன்பது என்பது செவ்வாயின் ஆதிக்கம் பெற்ற எண். முருகனுக்கும் மஹாவிஷ்ணு விற்கும் உகந்த எண் ஒன்பதாகும். ஆண்டு பிறக்கும் நேரத்தில் லக்னாதிபதி புதன் தைரிய ஸ்தானத்தில் சுயசாரம் பெற்று அமர்ந்திருக்கிறார். லக்னாதிபதியை குரு பார்க்கிறார். குருவின் சஞ்சாரத்தால் கன்னியர்களுக்கு தகுந்த மண மாகும். மாலை வாய்ப்புகளும் - மழலை பாக்யமும் - வேலைவாய்ப்புகளும் வியக்கும் விதத்தில் இருக்கும். பத்திரிகைத் துறை - எழுத்துத் துறை - ஆசிரியர் பணி - கணிதம் - இரசாயணம் - ஆன்மிகம் - சோதிடம் - வழக்கறிஞர் துறை - புத்தகத் துறை போன்றவற்றில் நல்ல முன் னேற்றம் காணப்படும்.

சுக்கிரன் தனது சஞ்சாரத்தை யோக ஸ்தானத்தில் இருப்பதால் கலைத்துறை செழிக்கும். சுக்கிரன் சஞ்சாரத்தால் கலைஞர்கள் கௌரவபடுத்தப்படுவர். வண்ணத்திரை, சின்னத்திரை இரண்டுமே மக்களுக்கு பயன ளிக்கும். உணவிற்கு எந்த விதமான பங்கமும் இராது. உணவு உற்பத்தியாளர்களுக்கு தகுந்த விலை நிர்ணயமாகும். மக்களுக்கு பொருளா தார நிலை உயரும். பெற்றோல் - டீசல் - கச்சா எண்ணெய் - சமையல் எண்ணெய் விலை உயரும்.

புத்தாண்டு பிறக்கும் போது உள்ள புதனின் இருப்பால் ரூபாயின் மதிப்பில் சலனம் இருக்கும். தங்கம் - வெள்ளி விலையும் அதிகரிக்கும். நிறைய சிவாலயங்களுக்கு கும்பாபிஷேகம் நடைபெறும். அரசாங்கத்தில் சிறு சிறு ஊசல்கள் இருக்கும். மழை பொழிவு நன்றாக இருக்கும். சராசரி அளவை விட இந்த வருடம் வெப்பம் அதிகரிக்கும்.

அண்டார்டிகா - அமெரிக்கா - ஐரோப்பிய நாடுகள் - சுமத்திரா தீவு - ஜப்பான் போன்ற இடங்களில் பூகம்பம் வர வாய்ப்புள்ளது. யாராலும் சரியான முறையில் வானிலையை கணித்து கூற முடியாத நிலை ஏற்படலாம். அணு ஆயுதத்தால் மக்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட லாம். தண்ணீர் தேவை அதிகமாகும். காடு களை அழிப்பது அதிகமாகும்.

(தொடரும்)

## நடமாடும் சேவை மன்னாரில்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் இடம்பெறும் நடமாடும் சேவை மன்னார் மாவட்டச் செயலகத்தில் நாளை வியாழக்கிழமை நடை பெறவுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் ஊட கப் பிரிவினரால் நேற்று ஊடகங்க ளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட செய் திக் குறிப்பிலே இவ்வாறு தெரிவிக் கப்பட்டுள்ளது. (6-8)



தேசிய ஒருமைப்பாட்டுக் கும் நல்லிணக்கத்துக்கு மான அலுவலகத்தின் நிதி யீட்டத்தின் மூலம் 11.68 மில்லியன் ரூபாய் செலவில் 2018 ஆம் ஆண்டு நிர்மா ணிக்கப்பட்ட முல்லைத்தீவு சின்னாறு பொழுதுபோக்கு பூங்கா, வடக்கு மாகாண விவசாய அமைச்சின் நிதி யீட்டத்தின் ஊடாக புனர மைக்கப்பட்டு வடக்கு மாகாண ஆளுநரினால் உலக மண் தினத்தை முன்னிட்டு கரைதுறைபற்று பிரதேச சபையிடம் நேற்று கையளிக்கப்பட்டது.

## இராசிபலன்

01.01.2025
மார்கழி 17, புதன்கிழமை
துதியை பின்னிரவு 3.58 மணிவரை

உத்தராடம் பின்னிரவு 1.27 மணிவரை
சுபநேரம் 4.59-6.29மணிவரை
இராகுகாலம் 12.29-1.59 மணிவரை

அமிர்த சித்தம்
சந்திராஷ்டமம் - மிருகசீரிடம், திருவாதிரை.

வளவன்

**மேஷம்** எடுத்த காரியத்தை முடிப்பதில் கண்ணும் கருத்துமாக இருப்பீர் கள், வெளியூர்த் தொடர் புகள் அனுகூலம் தரும், தொலை பேசி வழியில் செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம்.

**ரிஷபம்** அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள், சுணங்கிய காரியங்க ளில் முன்னேற்றம் காணும் நாள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள்.

**மிதுனம்** சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, திடீ ர்ச் செலவுகள் ஏற்படும் வாய்ப்புண்டு, வழிபாட் டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கடகம்** வராத உறவினர்கள் உங்கள் வீட்டிற்கு வருகை தரலாம், ஆதாயம் தரும் வேலையொன்றில் அக் கறை காட்டுவீர்கள், அன்பு நண்பர்க ளின் ஆதரவும் பெருகும்.

**சிம்மம்** இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், போட்டிக ளுக்கு மத்தியில் முன் னேற்றம் காணும் நாள், நோயிலி ருந்து நிவாரணம் பெறுவீர்கள், இனிமையான நாள்.

**கன்னி** உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், வியா பாரத்தை விரிவுபடுத் தும் எண்ணம் உருவா கும், உறவினர் வழியில் ஒத்துழைப் புக்கள் கிடைக்கும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும்.

**துலாம்** நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவு வார்கள், பெற்றோர் வழியில் பிரியம் கூடும், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் கூடும்.

**விருச்சிகம்** வருமானம் திருப்தி தரும், உறவினர் நண் பர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும், பாராட்டும் புகழும் கூடும் நாள், போசன சுகமுண்டு.

**தனுசு** நீண்ட நாளைய விருப்பம் மொன்று நிறை வேறும் வாய்ப்புண்டு, பூர்வீகச் சொத்துக்க ளால் நன்மையுண்டு, சுப நிகழ்வு களில் கலந்து கொள்ள அழைப் புக்கள் வந்து சேரலாம்.

**மகரம்** பெரியோரின் உதவி யால் சில நன்மைகள் நடைபெறலாம், நீண்ட நேரம் பணிபுரியும் சூழ்நிலை ஏற்படலாம், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம்.

**கும்பம்** காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், இறைவழிபாட்டுச் சிந் தனை மேலோங்கும் நாள், சுபவிரயங்கள் மேலோங்கும் நாள், வேலைச்சுமை கூடும் வாய்ப்புண்டு.

**மீனம்** அரசு தொடர்பான காரி யங்கள் அனுகூலமாக அமையும், பணப்புழக் கம் அதிகரிக்கும் நாள், புதிய பொருட்களை வாங்கும் எண் ணம் உருவாகும், போசன சுகமுண்டு.

நல்ல மனிதனின் பெருமை எல்லாத் திசைகளிலும் பரவி நிற்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்கியின்
# பொன்னியின் செல்வன்
670
பாகம் -III





இதைக் கேட்ட நந்தினியின் முகத்தில் புன்னகை அரும்பியது. "என்னையும் உட்படுத்திதானே சொல்கிறீர்?" என்று கேட்டாள். "ஆம் தேவி! விதிவிலக்குச் செய்யமுடியாது!" என்றான் ரவிதாஸன்.

"சந்தோஷம், இப்போது ரவிதாஸன் கூறியதும் உங்கள் எல்லோருக்கும் சம்மதந்தானே!" என்று நந்தினி மற்றவர்களை நோக்கி வினவினாள்.

எல்லாரும் ஒருவரையொருவர் பார்த்தார்கள் மறுமொழி சொல்வதற்குத் தயங்கினார்கள். சிலருக்கு அந்த ஏற்பாடு சம்மதமில்லையென்று தோன்றியது.

சோமன் சாம்பவன், "அது எப்படி நியாயமாகும்? நமக்கு எல்லா உதவியும் அளித்துவரும் தேவியை எப்படிப் பொது விதிக்கு உட்படுத்த முடியும்?" என்று கேட்டான்.

"என்னைப் பற்றிக் கவலை வேண்டாம். நான் உயிர் வாழ்ந்திருப்பதே வீரபாண்டிய சக்கரவர்த்தியின் கொடூரக் கொலைக்குப் பழி வாங்குவதற்காகத்தான். அந்தப் பழியை முடித்துக் கொடுக்கிறவர் யாராயிருந்தாலும், அவருக்கு நான் என்றென்றும் அடிமையாக இருக்கச் சித்தம்!" என்றாள் நந்தினி.

பின்னர் இந்தப் பேச்சுக்களையெல்லாம் புரிந்தும் புரியாமலும் கேட்டுக் கொண்டிருந்த சிறுவனை நந்தினி தேவி பார்த்து "என் கண்மணி! இந்த வீரவாள் உன் தந்தையினுடையது. இதை உன் பிஞ்சுக் கையினால் எடுத்து இங்கே உள்ளவர்களில் உனக்கு யாரை அதிகமாய்ப் பிடித்திருக்கிறதோ, அவர்களிடம் கொடு!" என்றாள்.

ரவிதாஸன் சற்று அருகில் வந்து "சக்கரவர்த்தி, எங்களையெல்லாம் நன்றாய்ப் பாருங்கள்! எங்களில் யார் வீரன் என்றும் தைரியசாலி என்றும் தங்களுக்குத் தோன்றுகிறதோ, அவனிடம் இந்தப் பாண்டிய குலத்து வீரவாளைத் தொட்டுக் கொடுங்கள்!" என்றான்.

சிம்மாசனத்தில் வீற்றிருந்த சிசு சக்கரவர்த்தி சுற்றுமுற்றும் பார்த்தார். எல்லாரும் அடங்காத ஆவலுடனும் பரபரப்புடனும் சக்கரவர்த்தியின் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொருவருடைய கண்களும் "என்னிடம் கொடுங்கள்! என்னிடம் கொடுங்கள்!" என்று கெஞ்சும் பாவத்தைக் காட்டின.

ரவிதாஸனுடைய முகமும் கண்களும் மட்டும் "என்னிடம் கொடுங்கள்!" என்று அதிகாரபூர்வமாகப் பயமுறுத்திக் கட்டளையிட்டன.

சிறுவன் இரண்டு மூன்று தடவை எல்லாரையும் திருப்பித் திருப்பிப் பார்த்த பின்னர், கத்தியைக் கையில் எடுத்தான். அதைத் தூக்க முடியாமல் தூக்கினான்.

அனைவருடைய பரபரப்பும் சிகரத்தை அடைந்தது. சிறுவன் பளிச்சென்றும் நந்தினி நின்ற பக்கம் திரும்பினான். "அம்மா! எனக்கு உன்னைத்தான் எல்லாரைக் காட்டிலும் அதிகமாகப் பிடித்திருக்கிறது. நான் பெரியவனாகும் வரையில் நீதான் எனக்காக இராஜ்யத்தை ஆளவேண்டும்" என்று சொல்லிக் கொண்டே வாளை அவளிடம் கொடுத்தான்.

**36 ஆம் அத்தியாயம்**
**இருளில் ஓர் உருவம்**

சக்கரவர்த்தி என்று அழைக்கப்பட்ட சிறுவன் கொடுத்த வாளை நந்தினி வாங்கிக் கொண்டாள். அதை மார்போடு அணைத்துத் தழுவிக் கொண்டாள். பின்னர் அச்சிறுவனையும் தூக்கி எடுத்து அவனையும் சேர்த்து மார்புடன் அணைத்துத் தழுவிக் கொண்டாள். அவளுடைய கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் பொழிந்தது.

(தொடரும்)

# சிறுவர் அரங்கம்

## நெஞ்சகமும் வஞ்சகமும்



ஒரு காட்டில் எருது ஒன்று இருந்தது. அந்தக் காட்டின் ஒரு பகுதியில் பச்சைப்பசேல் என்று புல் மண்டிக் கிடந்தது. எருதுக்குத் தான் இருக்கும் இடத்தில் கிடைத்த புல்லே போதுமான தாக இருந்தது. எனினும் தூரத்துப் புல்லே கண்ணுக்கு அழகாக இருந்ததால், புல் மண்டிக் கிடந்த பகுதியை நோக்கி ஒரு நாள் புறப்பட்டது.

அது போகும் போது, மரத்தில் இருந்த பச்சைக் கிளி அதைக் கூப்பிட்டது. "எருதண்ணா எங்கே போகிறீர்கள்?" என்று கேட்டது பச்சைக்கிளி. "எதிரில் உள்ள புல்வெளிக்குப் போகிறேன் புதுப் புல் தின்னப் போகிறேன்" என்றது காட்டெருது.

அண்ணா வேண்டாம் அங்கே புலியிருக்கிறது! என்று எச்சரித்தது பச்சைக்கிளி.

அப்போது அங்கே ஒரு நரி வந்து சேர்ந்தது அது பச்சைக் கிளியைப் பார்த்து, "ஒருவர் ஒரு வேலையாகப் போகும்போது எங்கே போகிறீர்கள் என்று கேட்பதே தவறு மேலும் எருது அண்ணா ஆசையாகப் புதுப்புல் தின்னப் போவதைத் தடுப்பது சரியில்லை. அங்கே புலியிருக்கிறது என்று. சொல்லி அவரை பயமுறுத்துவது மிக மிகத் தவறு புல்வெளியிலே புலியிருப்பதில்லை.

புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது என்று நீ கேள்விப்பட்டதில்லையா? அப்படியே புலியிருந்தாலும் எருது அண்ணாவின் கொம்பு அதன் குடலைக் கிழித்து விடாதா? எருது அண்ணாவை நீ என்னவென்று நினைத்துக் கொண்டாய்? என்று கேட்டது.

நரியின் பேச்சைக் கேட்ட எருதுக்குக் கிளியின் மேலே கோபம் கோபமாக வந்தது. தன் வீரத்தைப் பாராட்டிய நரியோடு பேசிக் கொண்டே புல்வெளியை நோக்கிச் சென்றது.

அது புல்வெளியில் அது இன்பமாக மேய்ந்து கொண்டிருந்தபோது நரி அங்கிருந்து நழுவியது. புல்வெளியில் ஒரு புறத்தில் மறைந்திருந்த கிழட்டுப் புலி எருதின் மேல் பாய்ந்து அதைக் கொன்று தின்றது. நரியும் அதன் குருதியைக் குடித்து மகிழ்ந்தது.

சாகும்போதுதான் எருதுக்கு அறிவு வந்தது. பச்சைக்கிளியின் எச்சரிக்கையைப் பொருட்படுத்தாமல் நரியின் நயவஞ்சகத்திற்கு இரையானதை எண்ணி வருந்தியது.

கருத்துரை:- வஞ்சகமில்லாதவர்கள் சொல்லும் கடும் சொல்லும் நன்மையைத் தரும். வஞ்சகரின் இன்சொல்லோ துன்பத்தையே தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த காலகற்பனையான உணர்வுகளில் மூழ்கிக் கிடப்பது நிகழ்கால அமைதியைக் குலைத்து விடுகிறது.

– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## 2025ஆம் ஆண்டில் மானிடம் வெல்லட்டும்

2025ஆம் ஆண்டின் பிறப்பு இன்று. இது ஆங்கிலப் புதுவருடப் பிறப்பாக இருப்பினும் அனைத்து நிர்வாகப் பணிகளிலும் ஆங்கில வருடமே நடைமுறையில் இருப்பதன் காரணமாக, அனைத்து மக்களும் ஆங்கிலப் புத்தாண்டைக் கொண்டாடுகின்றனர். வரவேற்கின்றனர்.

அந்தவகையில், 2025ஆம் ஆண்டின் வரவு உலகம் முழுமைக்கும் அமைதியையும் சமாதானத்தையும் தர இறைபரம்பொருளைப் பிரார்த்திப்போமாக.

அழகான உலகத்தைப் படைத்தருளிய இறைவன், மனிதன் என்ற உன்னதமான பிறவியின் உதவியோடு ஏனைய ஜீவராசிகளும் இப்பூமிப்பந்தில் மகிழ்வாக வாழ வழி வகுத்தான்.

எனினும் மனித சமூகம் மதத்தால் – நிறத்தால் – மொழியால் – இனத்தால் பிரிந்து நின்று நானா? நீயா? எனப் பலப்பரீட்சை நடத்துகிறது.

ஆம், விடைபெற்றுச் செல்கின்ற 2024ஆம் ஆண்டின் பெறுபேறுகள் எப்படியாக இருந்தன என்பது நீங்கள் அனைவரும் அறிந்ததே.

இலங்கையில் ஆட்சிமாற்றம் நடந்தது. ஆயினும், தமிழ் மக்கள் அனுபவித்து வரும் துன்பங்களுக்கு முடிவும் விடிவும் கிடைக்கவில்லை.

அதேநேரம் ரஸ்யா – உக்ரைன் போர், இஸ்ரேல் காசா மீது ஈவிரக்கமின்றி நடத்துகின்ற தாக்குதல்கள், மனித இனத்தையே அழிப்பதாகும்.

அதிலும் குறிப்பாக காசா மீது இஸ்ரேல் நடத்துகின்ற தாக்குதலில் பச்சிளம் குழந்தைகள் அகப்பட்டுப் போன சம்பவங்களை நினைக்கும்போது இதயம் நொந்து கொள்கிறது.

அதேசமயம் ஐ.நா சபை உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளால் கூட, மேற்குறிப்பிட்ட யுத்தத்தைத் தடுத்து நிறுத்த முடியவில்லை எனும்போது, ஐக்கிய நாடுகள் சபையும் மெல்ல மெல்லத் தன்னிலை இழந்து வருகிறது என்பதை ஊகிக்க முடியும்.

இதற்கும் மேலாக, வல்லரசு நாடுகள் தங்களின் மேலாதிக்கத்தை நிலைநிறுத்துவதற்காகத் தமக்குச் சேர்மதியான நாடுகள் நடத்துகின்ற ஈவிரக்கமற்ற தாக்குதல்களைக் கண்டிப்பதுமில்லை. கண்டுகொள்ளவதுமில்லை.

இவ்வாறான அதர்மங்களால் அப்பாவிப் பொதுமக்கள் இந்த மண்ணில் வாழ முடியாமல் மடிந்து போகின்றனர்.

அதே சமயம் பெரும்பாலான நாடுகளில் இனத்தின், மதத்தின், நிறத்தின், மொழியின் பெயரால் நடந்தேறுகின்ற மனித அவலங்கள் கொஞ்சமல்ல.

இதை நாம் விரிவுபடுத்திக் கூற வேண்டிய தேவையில்லாத அளவில் எங்கள் தமிழினம் இந்த நாட்டில் பட்ட வதைகள் இன்னமும் ஆறாத வடுக்களாக மேலெழுகின்றன.

இவ்வற்றையெல்லாம் ஒரு கணம் சிந்திக்கும்போது இறைசிந்தனை, தர்மம், இரக்கம், கருணை என எதுவும் இல்லாத மனித மனங்கள் மட்டுமே எஞ்சி நிற்கின்றன என்பது தெரிய வருகிறது.

இவ்வாறு மரத்துப்போன மனங்களைச் சன்னதம் கொள்ள வைக்கின்ற இணைய வசதிகளும் ஒருசேர, எல்லாமும் துன்பத்தைத் தருவதாயிற்று.

இந்நிலையில் இன்று பிறக்கின்ற 2025 ஆம் ஆண்டிலாவது மானிடம் வெல்ல, மனிதம் புனிதமாகப் போற்றப்பட வேண்டுமெனப் பிரார்த்திப்போம்.

## தந்தையும் தம்பியும் இணைந்து தாக்கியதில் அண்ணன் பலி

### பூண்டுலோயாவில் பயங்கரம்

*(பூண்டுலோயா)*

தந்தையும் இளைய மகனும் இணைந்து தாக்கியதில் மூத்த மகன் உயிரிழந்த சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பூண்டுலோயாப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

பூண்டுலோயா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட டன்சினன் தோட்டத்தின் கீழ் பிரிவுப் பகுதியில் வசிக்கும் 25 வயதுடைய, ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் தனது மகள், தந்தை மற்றும் இளைய சகோதரருடன் குறித்த பகுதியில் வசித்து வந்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை தந்தையும் இளைய மகனும் மது அருந்தி விட்டு வீட்டிற்கு வந்த போது, மூத்த மகன் வீட்டில் அதிக ஒலியில் பாடல்களைக் கேட்டுக் கொண்டிருந்துள்ளதுடன் தந்தை மகனிடம் ஒலியைக்குறைக்கச்சொல்லக் கோபமடைந்த மகன் தந்தையைத்தாக்கியுள்ளார்.

இந்நிலையில், தந்தை மற்றும் சகோதரனும் இணைந்து குறித்த நபரை பொல் மற்றும் கற்களால் தாக்கிக் கொலை செய்துள்ளதாகப் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய 46 வயதுடைய தந்தையும் 18 வயதுடைய சகோதரனும் கைது செய்யப்பட்டு பொலிஸ் பாதுகாப்பில் கொத்மலை பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் பூண்டுலோயாப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## விபரீத முடிவெடுத்த மாணவி உயிரிழப்பு

*(இளவாலை)*

இளவாலை சிறுவிலான் பகுதியில் இம்முறை கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் தோற்றிய மாணவி ஒருவர் விபரீத முடிவெடுத்து உயிரிழந்துள்ளார்.

குறித்த மாணவி நேற்று முன்தினம் திங்கட்கிழமை(30) நடைபெற்ற பரீட்சையில் தனக்கு முடிவுகள் பாதகமாக அமையும் என வீட்டில் தெரிவித்திருந்த நிலையில் வீட்டில் யாரும் இல்லாத நிலையில் தூக்கிட்டு உயிர்மாய்த்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ்.மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறுமுகம்ஜெயபாலசிங்கம் விசாரணை மேற்கொண்டார். குறித்த மாணவி கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் 7 ஏ, 2 பி சித்தியினையும் பெற்றிருந்தமை குறிபிடத்தக்கது. (ம-7,60)

## இராணுவப் பேருந்து - ஓட்டோ விபத்து ; ஒருவர் படுகாயம்

### வவுனியாவில் சம்பவம்

*(வவுனியா)*

வவுனியா மூன்றுமுறிப்புப் பகுதியில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை இராணுவத்தினரின் பேருந்தும் முச்சக்கர வண்டியும் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இவ்விபத்துக் குறித்து மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா, ஏ9 வீதி ஊடாக அநுராதபுரம் நோக்கிப் பயணித்த இராணுவத்தினரின் பேருந்து ஒன்று மூன்றுமுறிப்புப் பகுதியில் பயணித்த தனியார் பேருந்து ஒன்றை முந்திச் செல்ல முற்பட்ட போது எதிர்த்திசையில் வவுனியா நோக்கி வந்த முச்சக்கர வண்டியுடன் மோதிவிபத்துக்குள்ளானது.

குறித்த விபத்தில் முச்சக்கர வண்டியின் சாரதி படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,250)

## வாகன விபத்து இளைஞன் பலி

*(பேராதனை)*

கண்டி , பேராதனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தொடம்வலபிட்டிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவன் உயிரிழந்துள்ளதோடு பெண் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

வான் ஒன்று எதிர்த்திசையில் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில், மோட்டார் சைக்கிள் செலுத்துனரும் பின்புறத்தில் அமர்ந்திருந்த பெண்ணொருவரும் படுகாயமடைந்துள்ள நிலையில் பேராதனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மோட்டார் சைக்கிள் செலுத்துனர் உயிரிழந்துள்ளார்.

பேராதனைப் பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞனே உயிரிழந்துள்ளதாகத் தெரியவருகிறது.

படுகாயமடைந்த பெண் மேலதிக சிகிச்சைக்காக கண்டி போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பேராதனைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(ம-7)

## வவுனியாவில் விபத்து 7 வயதுச் சிறுவன் பலி

வவுனியா, பாவற்குளம் பகுதியில் நேற்று முன்தினம் துவிச்சக்கரவண்டி மீது பேருந்து மோதியதில் 7 வயதுச் சிறுவன் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

இதில் அப்துல் மஜித் என்ற சிறுவனே உயிரிழந்தவராவார்.

வவுனியா, பாவற்குளம், படிவம் இரண்டுப் பகுதியில் சாரதி பேருந்தை நிறுத்தி விட்டு மீண்டும் சேவையில் ஈடுபடுவதற்காக பேருந்தை செலுத்தியபோது துவிச்சக்கர வண்டியில் பயணித்த இரு சிறுவர்கள் வீதியை ஊடறுக்க முற்பட்ட போது பேருந்துடன் மோதி இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளைமேற்கொண்டு வருகிறார்கள். (ம-7,250)

### கல்வி நிலையம் சென்ற மகளை

## மோ.சைக்கிளில் ஏற்றச் சென்றவர் மயங்கி விழுந்து மரணம்

*(யாழ்ப்பாணம்)*

ஊரெழு கிழக்குப் பகுதியில் கல்வி நிலையம் சென்ற மகளை மோட்டார் சைக்கிளில் ஏற்றச் சென்ற இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் அதே இடத்தைச் சேர்ந்த கிருபரஞ்சன் (வயது- 38) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை(30) காலை தனியார் கல்வி நிலையத்திற்கு மகளை ஏற்றுவதற்காக மோட்டார் சைக்கிள் எடுக்கச் சென்றவர் திடீரென மயங்கி விழுந்துள்ளார்.

இதனை அடுத்து உடனடியாக யாழ். போதனா வைத்தியாசாலைக்குக் கொண்டு சென்ற நிலையில் அங்கு உயிரிழந்துள்ளார். இம் மரணம் தொடர்பில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை(31) யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணை மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு அறிவுறுத்தினார். (ம-7)

## வெயாங்கொடைப் பொலிஸ் நிலையத்தில் தீ விபத்து

வெயாங்கொடை பொலிஸ் நிலையத்தில் உள்ள அறை ஒன்றில் நேற்றுப் பிற்பகல் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

தீ விபத்தின் போது, குறித்த அறையிலிருந்த புத்தகங்கள் மற்றும் பழைய ஆவணங்கள் உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் எரிந்து நாசமாகியுள்ளதோடு,

பொலிஸ் நிலையத்தினுள் உள்ள போக்குவரத்துப் பிரிவு, சிறுவர் மற்றும் பெண்கள் பாதுகாப்புப்பணியகம் ஆகியவற்றின் அறைகளில் உள்ள ஜன்னல்கள், கதவுகள் மற்றும் புத்தகங்களில் சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் தீ விபத்தின் போது எவருக்கும் எந்த விதக் காயங்களும் ஏற்படவில்லை எனவும், கம்பஹா மாநகர சபையின் தீயணைப்புப் படையினர் இணைந்து தீப்பரவலை கட்டுப்படுத்தும் பணிகளில் ஈடுபட்டுள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நடக்கவிருக்கும் உள்ளூராட்சி சபைத்தேர்தல்கள் போட்டியிட இருக்கும் இளம் சமூகத்தினருக்கான ஒரு தெளிவூட்டல் பகுதி - I

01

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

## உள்ளூராட்சி சபைகள்

ஒரு நாட்டின் மத்திய அரசாங்கத்தின் செயற்பாடுகளுடன் மக்களால் நேரடியாகத் தொடர்புகளை ஏற்படுத்த முடியாது. எனினும் அரசாங்கத்தின் செயற்பாடுகளுடன் நேரடியாகத் தொடர்பு கொள்கின்ற வாய்ப்பினை உருவாக்கிக் கொடுத்திருக்கும் தாபனமாக உள்ளூராட்சி சபைகள் காணப்படுகின்றன.

இலங்கையில் காணப்படும் உள்ளூராட்சி சபைகளாக பின்வருவன அமைந்துள்ளன. அவையாவன: மாநகர சபை, நகரசபை, பிரதேச சபை என்பனவாகும். நகரமயமாக்கலில் மிக உயர் மட்டத்தில் நிலவும் பிரதேசங்களில் மாநகர சபைகள் அமைந்துள்ளன. நகரமயமாக்கல் குறைந்த பிரதேசங்களில் நகர சபைகள் உருவாக்கப்பட்டுள்ளன. கிராமியப் பிரதேசங்களில் பிரதேச சபைகள் அமைந்துள்ளன.

உள்ளூராட்சி மன்றக் கட்டமைப்பானது, தமது முன்னேற்றம் தொடர்பிலான தீர்மானம் மேற்கொள்கின்ற மற்றும் மேற்படி தீர்மானங்களை பொது மக்களின் அபிலாசைகளை நிவர்த்தி செய்வதற்காக அமுல்படுத்தும் ஆற்றலைக் கொண்டுள்ள சுயாதீன நிறுவனக் கட்டமைப்பாக மாறியுள்ளது.

இந்த நிறுவனக் கட்டமைப்பின் உந்துசக்தியாக மாறியிருப்பது மக்கள் பிரதிநிதிகள், தமது சமுதாயத்திற்குள்ளேயே வாழும் அயலவர்களின் விருப்பத்தின் பேரில் உறுப்பினர் பதவிக்கு நியமனம் பெறுவதாகும். அதன் அடிப்படையில் உறுப்பினர்களை நியமிப்பதற்கு சிறந்தவொரு தேர்தல் முறைமை இருக்கவேண்டும்.

## உள்ளூராட்சிச் சபைகள் தோன்றிய வரலாறு

இலங்கையின் உள்ளூர் அரசாங்கத்திற்கு (local government) நீண்ட வரலாறு உள்ளது. கி.மு 4 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஆரம்பகால குடியேற்றங்கள் கிராம அடிப்படையிலானவை என்று கூறப்படுகிறது. இந்தக் கிராமங்களை மன்னர்கள் நிர்வாகத்தின் ஒரு பிரிவாகப் பயன்படுத்தினர். ஒவ்வொரு கிராமமும் சுயாதீனமாக நிர்வகிக்கப்பட்டன.

கிராம சபைகள் (கம் சபாக்கள்) உள்ளூர் விவகாரங்களை நிர்வகித்தன, மக்களின் குறைகளை நிவர்த்தி செய்தன, சிறிய மோதல்களை தீர்த்தன. கிராம அடிப்படையிலான நிர்வாகம் பல நூற்றாண்டுகளாக ஒரு வடிவத்தில் தொடர்ந்தது. அன்றைய காலத்தில் கிராம சபைகளின் உறுப்பினர்கள் வசதி மற்றும் செல்வாக்கு பெற்ற குடும்பங்களில் இருந்து தெரிவுசெய்யப்பட்டனர்.

1818ஆம் ஆண்டில் இலங்கையில் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களால் நடைமுறையில் இருந்த கிராமச் சபைகள் அகற்றப்பட்டன. 1856 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க நெற்காணிகள் மற்றும் நீர்ப்பாசனக் கட்டளை சட்டம் (Paddy Lands and Irrigation Ordinance No. 9 of 1856) விவசாயம் மற்றும் நீர்ப்பாசனத்தை மேற்பார்வையிட கிராமச் சபைகளை மீண்டும் அறிமுகப்படுத்தியது. கிராமச் சபைகளுக்கு பிரித்தானியரால் நியமிக்கப்பட்ட அரச அதிபர் அல்லது உதவி அரச அதிபர் தலைமை தாங்கினார். அவர் கிராம சபைகளின் மற்ற உறுப்பினர்களை நியமித்தார்.

19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உள்ளூர் அரசாங்கம் (local government) பல முன்னேற்றங்களைக் கண்டது. நாட்டின் வீதிகளை நிர்வகிக்க 1861ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க வீதிக் குழுக்கள் தொடர்பான கட்டளைச் சட்டம் (The Road Committees Ordinance No 10 of 1861) மாகாண வீதிக் குழுக்கள் மற்றும் மாவட்ட வீதிக் குழுக்களை உருவாக்கியது.

இந்தக் குழுக்கள் அரசாங்க அதிகாரிகள், நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் (appointed members and elected members) கொண்டிருந்தன. வீதிக் குழுக்கள் 1861 முதல் 1951 வரையில் செயற்பட்டன. அதன்பின்னர் அவற்றின் செயற்பாடுகள் பொதுவேலைத் திணைக்களத்திற்கு (Public Works Department) மாற்றப்பட்டன.

1865ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க மாநகர சபைகள் கட்டளைச் சட்டம் (Municipal Council Ordinance No. 17 of 1865) சில உள்ளூர் நிர்வாகத்திற்கான பொறுப்பை உள்ளூர்வாசிகளுக்கு மாற்றியது. ஆரம்பத்தில் மாநகர சபைகள் தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டிருந்தன. இந்தக் கட்டளைச் சட்டத்தின்படி ஆரம்பத்தில் கொழும்பு மற்றும் கண்டிக்கு மாநகர சபைகள் உருவாக்கப்பட்டன.

இந்தக் கட்டளைச் சட்டத்தின்படி கொழும்பு மாநகர சபையின் எல்லைகள் நிர்ணயம் செய்யப்பட்டு மாநகரசபை 7 பிரிவுகளாக (இப் பிரிவுகள் மாவட்டங்கள் அல்லது வட்டாரங்கள் என்றும் அழைக்கப்பட்டன.) பிரிக்கப்பட்டு தேர்தல்கள் நடைபெற்றன.

மாநகர சபையின் தவிசாளராக அரச அதிபர் நியமிக்கப்பட்டார். நியமன அங்கத்தவர்கள் ஆளுநரால் நியமிக்கப்பட்டனர். டொனமூர் அரசியலமைப்பு 1931 முதல் நடைமுறைக்கு வந்தது. முழு நாட்டிலும் நிர்வகிக்கப்படும் ஒரு உள்ளூர் அதிகார அமைப்புக்கு தேவையான வழிகாட்டுதல்களை வழங்கியது. அதன் பிரகாரம் 1936 இல் இயற்றப்பட்ட சீர்திருத்தங்களின் விளைவாக மாநகர சபைகளின் அனைத்து உறுப்பினர்களும் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

1871 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க கிராம சமூகங்கள் கட்டளைச் சட்டம் (The Village Communities Ordinance No. 26 of 1871) உள்ளூர் நிர்வாகத்திற்கான கிராமக் குழுக்களையும் நீதித்துறை நிர்வாகத்திற்காக கிராம நீதிமன்றங்களையும் அறிமுகப்படுத்தியது.

உள்ளூர்வாசிகளின் வேண்டுகோளின் பேரில் ஆளுநருக்கும் மற்றும் சட்டமன்றத்திற்கும் (Legislative Council) ஒரு கிராமக் குழுவை உருவாக்க இந்தக் கட்டளைச் சட்டம் அனுமதித்தது. அரசாங்க அதிபர் கிராமக்குழுவுக்கு தலைமை தாங்கினார். மற்றைய உறுப்பினர்கள் அரச அதிபரால் நியமிக்கப்பட்டனர்.

கிராமக் குழுக்கள் (Village Committees) முன்னைய கிராம சபைகளைப் (Village Councils) போலவே இருந்தன. கிராமக் குழுக்கள் சிறப்பாகச் செயற்பட்டன. 1938 ஆம் ஆண்டில் உறுப்பினர்களை தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்க சட்டத்தில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. தேர்தல் நடத்த வட்டாரங்கள் உருவாக்கப்பட்டு, வட்டாரங்களிலிருந்து உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். குழுவுக்கான தலைவர் மற்றைய உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அதன்பின் நில வரி வசூலித்தல், உள்ளூர் சேவைகளான வீதிகள் அமைத்தல், புனரமைத்தல், நீர் வழங்கல், பொதுவான வசதிகள் மற்றும் பொதுச் சுகாதாரம் போன்றவற்றை கிராம மக்களுக்கு வழங்க கிராமக் குழுக்கள் அதிகாரம் பெற்றன.

1892 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க சுகாதாரம் பேணல் சபை கட்டளைச் சட்டம் (The Sanitary Boards Ordinance No. 18 of 1892) சிறு நகரங்களில் மின்சாரம், வடிகால், பொது வசதிகள், சந்தைகள், பால்பண்ணைகள், சலவை நிலையங்கள் (laundries) மற்றும் நீர் வழங்கல் போன்ற பல பொதுச் சுகாதார சேவைகளை வழங்க அலகுகளை (bodies) உருவாக்கியது. சுகாதாரம் பேணல் சபைகள் ஆளுநரால் நியமிக்கப்பட்ட அதிகாரிகளைக் கொண்டிருந்தன.

1898 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உள்ளூர் சபைகள் கட்டளைச் சட்டம் (The Local Boards Ordinance No. 13 of 1898) பெரிய நகரங்களுக்கான உள்ளூர் சுகாதாரம் மற்றும் சுகாதார சபைகளை (Local Health and Sanitation Boards) உருவாக்கியது. அவற்றின் அமைப்பு மற்றும் அதிகாரங்கள் சுகாதாரம் பேணல் சபைகளைப் (Sanitary Boards) போலவே இருந்தன. உள்ளூர் சுகாதார மற்றும் சுகாதார சபைகள் செப்ரெம்பர் 1, 1899 இல் செயற்படத்தொடங்கின.

1920 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க உள்ளூராட்சி சபைகள் கட்டளைச் சட்டம் (The Local Government Ordinance No. 11 of 1920) மூன்று வகையான உள்ளூர் அதிகார சபைகளை உருவாக்கியது: அவை நகர மாவட்ட சபைகள் (Urban District Councils (UDC)), பொது மாவட்ட சபைகள் (General Councils), கிராமிய மாவட்ட சபைகள் (Rural District Councils) என்பனவாகும்.

இதற்கு முன்னர் இருந்த உள்ளூர் அதிகார சபைகளுக்கு உறுப்பினர்கள் பெரும்பாலும் நியமிக்கப்பட்டனர். ஆனால் இந்த புதிய அதிகார சபைகளின் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 1922 ஆம் ஆண்டில் இரண்டு நகர மாவட்ட சபைகள் உருவாக்கப்பட்டன. 1923 இல் மேலும் ஆறு நகர மாவட்ட சபைகள் உருவாக்கப்பட்டன.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயர்தர...

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற விசேட ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர், மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கிடையில் பல கட்டங்களாக மதிப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளை இறுதி செய்யப் பொதுவாக 4 மாத காலங்கள் தேவைப்படுகின்றன. அதனைக் குறைக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

ஏப்ரல் மாதத்திற்குள் பெறுபேறுகளை வெளியிட முடியும் என நினைக்கிறேன் என அமித் ஜயசுந்தர குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## பொலிஸாரின்...

கட்டுப்பாடு தமது நிர்வாகிகளிடமிருந்து முற்றிலும் நழுவிவிடப்பட்டுள்ளதாக இலங்கைப் பொலிஸ் அறிவித்துள்ளது.

இதனை விரைவில் மீடெடுக்கத் தேவையான பணிகளை தற்போது மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸ் தனது முகநூல் பக்கத்தில் விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. (ம-7)

## நீதிமன்றத்...

நேற்று இடம்பெற்ற விசேட ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

"உயர் நீதிமன்றத் தீர்ப்பு இன்று (நேற்று) எனக்குக் கிடைத்தது. 68 பக்கத் தீர்ப்பு. மிகவும் பொருத்தமான முடிவை எடுத்து அதை அமுல்படுத்த நீதிமன்றம் உத்தரவிட்டது. இதனை ஆய்வு செய்து வருகிறோம். எது பொருத்தமான தெரிவு என்று ஒரேயடியாகச் சொல்ல முடியாது. அது தொடர்பில் ஆய்வு செய்ய வேண்டும்."

"வழக்கமாக, புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளை வழங்குவதற்கு சுமார் 40 நாட்கள் ஆகும். முன்னுரிமை அளிக்க நடவடிக்கை எடுக்கப்படும்."

கடந்த செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி நடைபெற்ற தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையின் முதல் வினாத்தாளில் முன்னதாகவே வெளியான மூன்று வினாக்களுக்கு இலவச மதிப்பெண்கள் வழங்குவது அடிப்படை மனித உரிமை மீறல் என உயர் நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்துள்ளது.

இதன்படி, வல்லுனர்கள் முன்வைத்த மூன்று பரிந்துரைகளில் இருந்து பொருத்தமான பரிந்துரையைத் தெரிவு செய்து அதனை உடனடியாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு அமர்வு உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## ஒதுக்கீட்டுச்...

ளது.

அத்துடன் குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்றத்தின் ஒப்புதலுக்குச் சமர்ப்பிப்பதற்கும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ம-7)

## மண்ணெண்...

5 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ள நிலையில் அதன் புதிய விலை 183 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், ஏனைய எரிபொருட்களின் விலையில் மாற்றம் மேற்கொள்ளாதிருப்பதற்கு இலங்கை கனியவளக் கூட்டுத்தாபனம் தீர்மானித்துள்ளது.

அதற்கமைய, ஒக்டென் 92 பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 309 ரூபாயாகவும், ஒக்டென் 95 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 371 ரூபாயாகவும் தொடர்ந்தும் பேணப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், ஓட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் விலை 286 ரூபாவாகவும், சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 313 ரூபாயாகவும் தொடர்ந்தும் மாற்றமின்றிப் பேணுவதற்குத் தீர்மானித்துள்ளதாக இலங்கை கனியவளக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது. (ம-7)

## ஊழல் எதிர்ப்புச்...

ரின் தலைமையில் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு, சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் சட்ட வாக்கத் திணைக்களம் ஆகிய நிறுவனங்களின் சிரேஷ்ட அலுவலர்களை உள்ளடக்கிய குழுவை நியமிப்பதற்கு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க சமர்ப்பித்த யோசனைக்கே இவ்வாறு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. (ம-7)

## மொட்டு...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் தேர்தல்களில் எமது கட்சி பலத்தைக் காட்டும். பொய் வாக்குறுதிகளை வழங்கி ஆட்சிக்கு வந்தவர்களுக்கு எதிர்வரும் தேர்தல்களில் மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள்.

மொட்டுக் கட்சி தற்போது ஆட்சியில் இல்லாததன் அருமையை மக்கள் உணரத் தொடங்கிவிட்டார்கள்.

எமது கட்சி மீண்டும் ஆட்சியைப் பிடிக்கும். மக்கள் நிம்மதியாக வாழும் சூழலை ஏற்படுத்துவோம் எனவும் தெரிவித்தார்.(ம-7)

## 2025...

வல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் இத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகப் பாராளு மன்றச் செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் முதலாவது மதிப்பீட்டுக்காக 2025 ஜனவரி 09ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ம-7)

## பொது...

மற்றும் மக்கள் பிரதிநிதிகளுக்கும் கிடைத்து வருகின்றது.

அரசு மீது மக்கள் வெளிப்படுத்தியுள்ள நம்பிக்கையைப் பாதுகாப்பதற்கும், குறிப்பாக அரச சேவையில் எதிர்பார்க்கப்படும் சாதகமான மாற்றங்களை மேற்கொள்வதற்காக அவ்வாறான முறைப்பாடுகள் தொடர்பாக பக்கச்சார்பற்ற வகையிலும் மற்றும் விஞ்ஞான ரீதியாகவும் விடயங்களை விசாரணை செய்ய வேண்டியுள்ளது.

அதற்கமைய, முன்னைய அரசுகளின் கீழ் அரச நிறுவனங்கள் செயற்பட்டுள்ள விதம் தொடர்பிலும், தற்போது அரச நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பிலும் முன்வைக்கப்படும் பொதுமக்களின் முறைப்பாடுகள், விளக்கமளித்தல் மற்றும் பல்வேறு மூலங்களிலிருந்து தெரியவரும் தகவல்கள் தொடர்பான விடயங்களை விசாரணை செய்வதற்காக அமைச்சு மட்டத்தில் நாடு தழுவிய சேவையில் முதலாம் தர அலுவலர் அல்லது புலனாய்வுச் செயன்முறை தொடர்பான அனுபவமுள்ள அரச சேவையின் முதலாம் தர நிறைவேற்று அதிகாரியின் தலைமையில் விசாரணை அலகை நிறுவுவதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2024.12.31
சீட்டிழுப்பு இலக்கம் 5702
G 7 2 6 7 3 0
அத சம்பத G 6 7 3 0
சீட்டிழுப்பு இலக்கம் 277
National Lotteries Board

தன நிதானய
திகதி 2024.12.31
சீட்டிழுப்பு இலக்கம் 1732
S 01 47 65 72 S
96337

மெகா பவர்
திகதி 31/12/2024
சீட்டிழுப்பு இலக்கம் 2050
R 04 07 25 56 69
169948

லக்கி 7 VIP
திகதி 2024.12.31
சீட்டிழுப்பு இலக்கம் 528
F 0 3 2 2 8 8 F

கோவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3944
சீட்டிழுப்பு திகதி 31.12.2024
H 16 17 68 69
H 093926

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.12.31
சீட்டிழுப்பு இலக்கம் 1011
மகரம் 10 35 42 54 மகரம்
076635 04

உத்தியோகபூர்வ முடிவுகள்
31.12.2024 வெற்றி வாரம் 410
ஆங்கில எழுத்து W
8 1 7 2 9 5
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.28,247,586.00
44299
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2676
சீட்டிழுப்பு திகதி 2024.12.31
தினம் செவ்வாய்க்கிழமை
07 11 29 74 F
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 77,123,929.60

சனிதா
திகதி 31.12.2024 வெற்றி வாரம் 4837
02 27 49 57 C
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 62,263,861.60
23629

சசிரி
வெற்றி வாரம் 590
31.12.2024 செவ்வாய்க்கிழமை
03 20 38
ரூ.200,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4388
சீட்டிழுப்பு திகதி 31.12.2024
தினம் செவ்வாய்க்கிழமை
06 21 52 57
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,000,000.00
152040

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
L 38 32 36 47 55
1852
31.12.2024
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.560,355,977.80

செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் 2502
சீட்டிழுப்பு திகதி 2024.12.31
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.58,822,099.20
அத கோடிபதி ADA KOTIPATHI
27 33 62 69 P
253017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவருக்கும் புதுவருட வாழ்த்துக்கள்

**மலிவு விலையில்**

பாடசாலை மாணவர்களுக்கான (SOCKS) காலுறைகள் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம். பாடசாலை நலன்புரிச் சங்கங்களுக்கு விஷேட கழிவு வழங்கப்படும்.

(C-1922)

**076 315 6470**


## பணவீக்கத்தில் மாற்றம்

(கொழும்பு)

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் மற்றும் கொழும்பு நகர்ப்புற சமூகத்தின் 2024 டிசம்பர் மாதத்திற்கான நுகர்வோர் பணவீக்க வீதம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி கொழும்பு நகர்ப்புற சமூகத்தின் நுகர்வோர் பணவீக்கம் 2024 டிசம்பர் மாதத்தில் -1.7% ஆக அதிகரித்துள்ளதாக மக்கள்தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் நேற்று (31) வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 2024 நவம்பர் மாதம் இது -2.1% ஆக பதிவாகியிருந்தது.

2024 டிசம்பரில், உணவு வகையின் வருடாந்தப் பணவீக்கம் (புள்ளி) 0.8% ஆக அதிகரித்துள்ள நிலையில், 2024 நவம்பரில் இது 0.6% ஆகவும் பதிவாகியிருந்தது. (ம-7)


**அண்ணா**

விரைவுப் பொதிகள் சேவை

ANNA EXPRESS COURIER SERVICE

வெளிநாடுகளுக்கான பொதிகளையும் கடிதங்களையும் விரைவாகவும் நம்பிக்கையுடனும் அனுப்பிட



புதுவருட வாழ்த்துக்கள் 2025

UK லண்டன் 21Kg 1400/=

075 330 5500
076 122 1566

(2849)

யாழ்ப்பாணம் சங்கானை வவுனியா மல்லாகம் ஆவரங்கால் நெல்லியடி கைதடி கிளிநொச்சி வவுனியா திருகோணமலை கொட்டாஞ்சேனை

அறுசுவை உணவுகளிற்கு சுத்தமான

**றோயல் நெய்**

Royal

உங்கள் வாழ்வின் இனிய தருணங்களை தரமான றோயல் நெய் கொண்டு தயாரித்த அறுசுவை உணவுகளுடன் கொண்டாடி மகிழுங்கள்



ஆய்வுகூடத்தில் தரம் பரிசோதிக்கப்பட்டு பொதியிடப்படுகிறது.

குறிப்பு :- யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து பாமசிகளிலும் சுப்பர்மார்க் கட்களிலும் பலசரக்கு கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்

(C-1924)

Marketed By :-
சிவா நறுமணப் பூங்கா®
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 2222 567

Packed By:- Royal Industries®

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas- All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-1923)

**மொத்தக் கொள்வனவு**

அங்கர் யோகட் மொத்தக் கொள்வனவுகள் விசேட விலையில் பெற்றுக் கொள்ளலாம். வடமராட்சி, தென்மராட்சி சில்லறை கடைகளுக்கு பலசரக்குப் பொருட்கள் விநியோகத்திற்கு எம்மை நாடுங்கள்.

ஹப்பி சூப்பர்மாக்கட்
உரும்பிராய்
48/= ~~80/=~~
077 773 0900
(697)

ICT புதிய பிரிவுகள் ஆரம்பம் திரு.இ.குமரன் -B.Sc

**Gr. 6,7,8,9,10,OL**

Branch I : 74, சாமாதி வீதி, தலையாழி, பிரம்பாடி
Branch II : கோண்டாவில் கிழக்கு, இருபாலை வீதி

Computer Lab
Study Guide
Examination
Past Papers
Revision

**Tamil / English Medium Classes**

ICT துறையில் 22 வருட கற்பித்தல் அனுபவம்

MIS ICT COLLEGE TP:0776577359, Mr.R.Kumaran - B.Sc.

(692)

**ஸ்ரீ நயினை அம்மன் திருமணசேவை**

திருமணத்திற்கு வரன் தேடுகிறீர்களா?
இன்றே எங்களுடன் இணைந்திருங்கள்

உள்நாடு, வெளிநாடு, வைத்தியர், பொறியியலாளர், வங்கி முகாமையாளர், விரிவுரையாளர், அரச உத்தியோகம், தனியார் துறை, செவ்வாய் குற்றம், சூரியன் + செவ்வாய் போன்ற அனைத்து விதமான ஜாதகங்களும் எம்மிடம் மிகப் பொருத்தமாக உடன் பெற்றுக் கொள்ளலாம்.

தை மாதம் முழுவதும் அனைவருக்கும் பதிவுக்கட்டணம் இலவசம்

தொடர்புகளுக்கு : **074 111 7874**

(2855)

# RANA ELECTRONICS

Delears in Electronics & Electrical.




No.92 Stanley Road Jaffna. TP.021 222 5105

(C-1925)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினால் இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.01.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.